தனிப்பிரதி விலை { உள்நாடு 1¼ அணா / வெளிநாடு 1½ அணா

KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு மாசிமீ 27உ. (10—3—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 46

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## வேதப்புரட்டை வெளியாக்கும் "ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு.

வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0
ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு
தபால்சார்ஜ் இனம்.

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும பரமானந்த சுறுசுறுப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு மலிவு. 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் செ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை செ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல ரோய்களுக்கும் ஸ்வானுபவ அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

## செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாடு.

மேற்படி மகாநாட்டின் நடவடிக்கைகளைத் திரட்டிப் புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக்கட்சி அபிமான பெரிய தலைவர்களின் ஆப்டோன் படங்களையும் அவர்களுடைய பிறப்பு வளர்ப்பு சரித்திரத்தையும் காணலாம். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமியின் படம் புஸ்தகத்தின் பேரில் வெகு அழகாக அமைத்திருக்கிறது. மகாநாட்டிற்கு நேரில் வரசந்தர்ப்பப்படாதவர்கள் இந்தப் புஸ்தகத்திலொன்றையாவது அவசியம் வாங்கி வைத்துக்கொள்ளவேண்டியது. சொற்ப காபிகளே கைவசம். உடனே எழுதுங்கள். விலை அணா 8.

ஒரே காலத்தில் 6 காபிகள் வாங்கினால் அணா 10 க்கு வி. பி. யில் அனுப்பப்படும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர், தபாற்பெட்டி 119, மதராஸ்.

## திருப்பூர் பனியன்ஸ் & ஜவுளிகள்.

பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் மெல்லியதாயும் அதிக நாள் உழைக்கக்கூடியதுமான ஜவுளிகளும் பனியன் திணுசுகளும் கிடைக்கும்.

விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

வெளியூர் ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும்.

அட்வான்ஸ் இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

தி ஜெனரல் நிட்டிங் பாக்டரி,
திருப்பூர். (தென்னிந்தியா)

## மதனகாமேஸ்வர லேகியம் (Regd)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கேடலாக் இனம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி, K. A. S.
போஸ்டு முல்லச்சேரி, தென்மலையாளம்.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்விமிக்க சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46 பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் லவன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனம்.

வருட சந்தா தபாற்கூலி உள்பட

| | |
|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூ. 1—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 1—4—0 |

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.



நீங்கள் அநேக மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி தீராமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் பழநி, சி. எம். சாமி

## குருதாம்பர பஸ்பம்

சாப்பிடுங்கள்.

**சகல வியாதிகளுக்கும் கைகண்டது.**

இடிபி, குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், கடிப்புகள், மாறிவிட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம் வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50-நாள் 100 வேளை பஸ்பம் அனுபானமும் விலை ரூ. 50, 25-நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

இனாமாய் குருதாம்பர பஸ்பம் மாதிரிபாக்கெட் விரும்புவோர் 2-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணமாகி போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒன்னாரை வருஷ காலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணமானான். மூலவியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவனும் பூர்ண குணமானான். ஆகையால் சகல வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

11—4—27 A. M. துரைசாமி, 80-நிர்மார்க்கம் ரோடு, குனி பெங்களூர்

**தாதுபுஷ்டிக்கு, பழநி, சி. எம். தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.**

வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்கிறது. தாது விர்த்தியைகொடுத்து புத்திர சந்தானத்தை உண்டுபண்ணும். பத்தியமில்லை, 24-நாள் பஸ்பம் விலை ரூ. 10-0-0 ஏராளமான நற்சாக்ஷிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்,

**பழனியப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.



சகோதரிகளே!

எனக்கு 19 வருடங்கள் வரையில் புத்திர பாக்கியமில்லாமல் ... கஷ்டப்பட்டு வந்த சூதக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்திர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

சுந்தராம்பாள்.

"சௌரியா"

ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான

'சௌரியாவை'

சாப்பிட்டு சூதக சூலை, சூதக கனி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதிகளினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சுபவதிகளாய் வாழ்கின்றனர்.

விபரமான கேட்லாக் இனாம்.

புட்டி 1-க்கு ரூபாய் 3—0—0.

பாக்கிங் தபால் செலவு வேறு,

சங்கர ராம் மெடிகல் ஹால்,

சேலம்.



## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0

மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244, தங்கசாலைவீதி, மதராஸ்,

டெலிபோன் 3311-

தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்,

எங்கள் ரோலக்ஸ் கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

... வாட்ச் கம்பெனி,

... மதராஸ்.



... மோட்டார் ஓட்டும் ... கலாசாலை

(1916 ...)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ... மற்ற விபரத்திற்கு ...

... மோட்டார் ...

... மதராஸ்.



## விலாசம் தேவை.

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பரவச மகிழ்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், 'சகல்ய ரத்னம்' என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

சுகானந்த ஔஷதாலயம்

தபாற் பெட்டி 222,

மதராஸ்.


சுயமரியாதை பெறவேண்டுமானால் "குடிஅரசு" "திராவிடன்" பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

## வருணாஸ்ரமக்கொடுமையே
# நமது வைத்தியத்தை அழித்தது.

(கைவல்யம் எழுதுவது)
(முன் தொடர்ச்சி.)

முற்காலத்தில் இந்தியதேசத்தில் பல இருடிகள் இமயமலையில் ஒருங்குகூடி நோய்கள் மனிதனுக்குகஷ்டத்தை உண்டுபண்ணுவதுமல்லாமல் தங்களுடைய தவத்திற்கும் ஆனியையுண்டாக்கும் தன்மையுடையதாக விருப்பதால் மனிதனுக்குள்ளமுக்கிய விரோதி அந்நோய்களென்று தெரிந்து அவற்றிற்குப் பரிகாரம் தேடிவர தங்களில் ஒருவராகிய பாரத்துவாஜரை வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொண்டுவர இந்திரனிடமனுப்பி அவர்கற்றுவந்து பல சீடர்களுக்கு உபதேசிக்க அவர்கள் கற்று வியாதிகளைத்தீர்த்து வந்ததாகவும் அவ்விதம் கற்று அடைந்து அனுபவித்து வந்த வைத்திய சாஸ்திரத்தைப்பற்றி சரகர் சுஸ்ருதர் என்னும் பெரியவர்கள் சமஸ்கிருதபாஷையில் அநேக சாஸ்திரங்களை செய்தார்களென்றும் சக்தி, சந்திக்குச்சொல்ல நந்தியால் குருமுனி கேட்டு சிஷியர்களான புலத்தியன் முதலிய சித்துபுருடர்களுக்குச்சொல்ல இப்பெரியோர்கள் தமிழ்பாஷையில் அநேகப்பாடல்களாகப் பாடினார்களென்றும் சொல்லப்படுகிறது.

மனிதனுக்கு எப்பொழுது பசியெடுத்ததோ அதற்கு ஏதையாவது உண்டானோ எக்காலத்தில் ஆகாரங்களை நெருப்பில்சுட்டு உண்ணப்பழகினானோ எப்பொழுது சுவையின் வேறுபாடு அவனுக்குத் தெரிந்ததோ எப்பொழுது அவைகளை அனுபவிக்க ஆசைகொண்டானோ எப்பொழுது அந்த ஆசைக்கு எதிரிடையாக விருந்ததை அழிக்க முயற்சித்தானோ அப்பொழுதே அவன்தேகம் முன்னிருந்த இயற்கையில் மாறுதலடைந்து விட்டது அப்பொழுதே அதற்குப்பரிகாரமும் தேட ஆரம்பித்துவிட்டான். பனி, மழை, வெயில் முதலியவைகளுக்கு மறைவும் ஆகாரங்களின் சுவையின் விர்த்தியும் அதிகரிக்க அதனாலுண்டாகும் சிரமங்களைத்தீர்த்துக்கொள்ள பரிகாரங்களும் ஏற்பட்டு விட்டன. மனிதனுக்கு அறிவு விருத்தியாகவும் அதனால் உண்டி, உடை, இடம் முதலியவைகள் எப்படி விருத்தியாயிற்றோ அப்படியே மனிதனுடைய உபாதிகளில் முக்கியமான வியாதிகளுக்கும் பரிகாரங்களும் விர்த்தியாயின அதுவே வைத்தியம்.

முதலில் காட்டுவைத்தியமாகவிருந்து நாட்டுவைத்தியமாகி சித்தவைத்தியமென்றும், ஆயுர்வைத்தியமென்றும், யூனானியென்றும், நமது நாட்டில் சக்கரவர்த்தி செங்கோலிலிருந்து உழவர் ஏழைகோல் வரையிலும் பரவி இருந்ததை இங்கிலீஷ்வைத்திய சட்டதிட்ட வியாபார பெரும்புலி நமது பிறமையின் உதவியால் நமது நாட்டுத் தொழில்களை அழித்ததுபோலவே வைத்தியத்தையும் அழித்து வருகின்றது. சொல்ப அவசியத்திற்கும் பல அவசியமில்லாததற்கும் அநேகம்பொருள்கள் செலவாகின்றன. குடும்ப வருவாயிக்கும் அவசியத்திற்கும் மேற்பட்டுத் துணிகளில் பணம் செலவிடுவதுபோலவே வைத்தியச் செலவு குடும்பத்தின் வருவாயில் ஒரு பாகமாகி விட்டது. அந்தச்செலவைக்குறைக்கவும் அவசியத்திற்கும் அனாவசியத்திற்கும் அளந்து செலவிடவும் நமது வைத்தியத்திலுள்ள முக்கிய பாகங்களைத்தெரிந்து அனுகூலமடையவும் பண்டிதர் ஆனந்தத்தால் செங்கல்பட்டு மகாநாட்டில் கொண்டுவந்த தீர்மானத்தைநான் ஆதரிக்கும்படியாய் சபைத்தலைவர் பாண்டியரால் எனக்கு கட்டளையிடப்பட்டது. அதை உங்களுக்கு விபரமாக என்னால் எடுத்துமகாநாட்டில்சொல்லப்படாமையால் இப்பொழுது குடிஅரசு மூலமாகச்சொல்லுகிறேன். சொல்லுவதைஎல்லாம் பெருமையோடு படித்து என் முடிவைத்தெரிந்து அதில் உங்கள் அனுபோகத்திற்கு வரும் நல்லவைகளை எடுத்துக்கொண்டால் நமக்கு நன்மையுண்டாவதுமன்னியில் நம்மைப்பார்த்து அக்கம் பக்கத்தவர்களும் நன்மை யடைவார்கள்.

வைத்தியர் தம்தொழில் நிபுணராகி ஜீவகாருண்யத்துடன் ஆன்மாக்களுக்குறும் தேகப்பிணிகளைத்தீர்த்து இரட்சிக்கும் மேம்பாட்டை யடைவதற்கு உடற்கூறு இலக்கணம் அறிவதவசியமென்பதற்கும் சந்தேகமுண்டோ! தேகத்தின் உறுப்புகள் சுபாவமாய் சவுக்கிய ஸ்திதியிலிருக்கும்பொழுது அவற்றின் இலட்சணங்களை யறிந்தாற்றான் அவ்வுறுப்புகள் பிணிபடுங்காலத்தில் அவைகளுக்குண்டாகும் மாறுபாடுகள் என்னவென்பதைநன்றாய்ப்பகுத்தறிந்துகொண்டு அந்த விகாரங்களுக்குத்தக்க மருந்துகள் செய்து பிணி தீர்ப்பது சுலபமாயிருக்கும். இவ்விஷயத்தில் யாதொரு சந்தேகமுமில்லை: ஆனால் நாட்டு நூல்களில் உடற்கூறி லக்ஷணத்தையறிந்து எடுத்துரைத்துள்ளது கண்ணுக்குப்படவில்லையே, நாட்டு வைத்தியர்கள் உடற்கூறி லக்ஷண மறிந்து கொள்ள வசதியில்லாமல் அவ்விஷயத்தைப் பற்றியாதும் தெரியாதவர்களாக விருக்கிறார்கள் என்பதும் ஞாயந்தானே குருமுனி முதலிய சித்துபுருடர்கள் "நாடி" விஷயமாகச் சொல்லியிருப்பது வைத்தியர்களுக்குத்தகுமான ஞானத்தை உண்டாக்குமென்பது சந்தேகந்தானே சுஸ்ருதர் உடற்கூறி லக்கணத்தைத் தமக்குத் தெரிந்தவரையிலும்சொல்லி இன்னின்ன ஆயுதங்கள் இன்னின்ன விதமாய் அளவாய் இன்னலோகமாயிருக்கவேண்டுமென்று சொன்னதாகவும் தேரையர் ஒருவனுடைய மண்டையிலிருந்த தேரையை யுக்தியோடு எடுத்தினால் தேரையர் என்கிற பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவையனைத்தும் காரியத்திற்குதவவேண்டுமே. இவையனைத்தையும் பொய்யென்றும் சொல்லலாமா? நம்நாடு அநேக காலத்திற்குமுன்னே நாகரீகமடைந்திருந்ததென்றும் அக்காலத்திலிருந்த நம் முன்னோர்கள் எல்லாவித சக்தியும் நிறையப் பெற்றவர்களென்றும் உடற்கூறி லக்கணமும் இரண வைத்தியமும் தெரியாமலா இருந்தார்கள் என்னும் கேள்விக்கும் பதில்வேண்டும் அவையனைத்தும் அநேக காலத்திற்குமுன் இருந்தது தான் தைலத்தோணிகூட இருந்தது வாஸ்தவமாக ஒத்துக்கொண்டு அவை நம்நாட்டில் பரம்பரையாக வராமல் அவையனைத்தும் மறைந்து பல நூற்றாண்டுகளாக வைத்தியபயிற்சி செய்து வரும் வைத்தியர்கள் பல காரணங்களால் வைத்தியபாகத்தையே கற்றுக்கொண்டு வைத்தியம் செய்து வந்ததாகவே தெரிகிறதே இதற்குக்காரணமென்ன? அறுத்தும், துண்டித்தும், ஒட்டியும், தைத்தும் செய்யும் ஆயுதவைத்தியம் நம்மிடமில்லாதிருந்தமையாலல்லவா இங்கிலீஷ் வைத்தியத்தின் அவசியமும் அதில்பற்றும் உண்டாகி இவ்வளவு பரவ ஏதுவுமாயிற்று நமது தேசத்தில் ஆயுதவைத்திய பயிற்சி பரவாமலிருந்ததற்கும் அதன் சாஸ்திரங்களும்வைத்தியப்படிப்பும்க்ஷீணிப்பதற்கும் காரணமென்ன? நமது ராஜாக்களின் வாதினால் க்ஷீணித்துப்போயிற்று என்று வெகு லேசாகச் சொல்லிவிடலாம். அதன்உண்மை அதனை நமது ராஜாக்களும் அவர்கள் புரோகிதர்களும் அவைகளை அழித்துவிட்டார்கள் என்பதே உண்மை. இந்தியதேசத்தின் பழமைகள் எக்காரணங்களால் மறைந்தனவோ அக்காரணங்களாலேயே ஆயுர் வைத்தியமும் அதன் பயிற்சியும் பாழ்படப்பட்டுப் பாழாயின.

பிரசங்கத்திலும் எழுத்திலும்நம்மால் பெருமையாகப்பேசப்படும் ஆயுர்வேதமோ சித்தவைத்தியமோ முன்னிற்குவந்து அதன் ஆயுதரண வைத்தியமும் மற்றுமுள்ள அதன் ஏற்பாடுகளும் இங்கிலீஸ் வைத்தியத்தினுடன்போட்டிபோடவேண்டுமானால், நமது ஜாதியும், சமயமும், வைத்தியனிடம் போட்டிக்குக் காட்டக் கடவுளைக் கொண்டு வரும்புரோகிதனும், இப்பொழுது நமக் கேற்பட்டிருக்கும் புண்ணிய லோகசொர்க்கங்களும், அதை இப்பொழுது அடைய நினைக்கும் வழிகளும் ஒழிந்து இவையனைத்தும் கூட்டோடே கைலாசம் போனாலொழிய நமது வைத்தியத்தை முன்னிற்குக் கொண்டு வர மார்க்கமில்லை. வைத்தியத்தில் கடவுள் வந்து குறுக்கிட்டு வைத்தியன் கடமையைத் தடைப் படுத்தி அவன் மனதை சோரச் செய்கிறது. சமய ஒழுக்கம் சனியனைப்போல வந்து சார்ந்துகொண்டது. வருணாஸ்ரம தர்மம் வந்து வைத்தியத்தைக் கொன்று பிணமாக்கி பாடைகட்டி நான்கு மூலைக்கும் நான்கு வருணமும் நான்கு ஆளாக நின்றுவிட்டது. இவைகளினாலேயே நமது வைத்தியம் அழிக்கப்பட்டன என்று நான் சொன்னால் நீங்களும் ஆச்சரியப்படுவீர்கள் சமய வாதிகளும் எங்களை அழிக்கப் புறப்பட்டிருக்கும் நவசக்தி பத்திரிகைப் பண்டிதரும் கோபிப்பார்கள். அறிவின் புகுதியிலும் நியாயத்திலும் உலக அனுபோக பிரத்தியக்ஷத்திலும் கோபத்திற்கு இடமில்லை என்று வியாபக அறிவிலாப் பண்டிதர் உணராவிட்டாலும் அக்கோபம் நியாயத்தின் முன்னால் உங்களிடம் எங்களை அழிக்காதென்பதை நானறிவேன்.

சமய ஒழுக்கத் தீண்டாமையும் வருணாஸ்ரம அணிவகுத்த ஏற்பாடும் கடவுளைக் காட்டிப் பிழைக்கும் புரோகிதப் பிழைப்பும் நமது வைத்தியத்தைத் தொலைத்து விட்டன வென்று மேலே சொன்னேன். அதற்கு கீழேசொல்லப்படும் நியாயத்தை விரித்த மனதால் சிந்தியுங்கள். வைத்தியத்திற்கு ஜீவாதாரமான உடற்கூறிலக்கணம் இவை சாஸ்திரப் படிப்போடு நில்லாமல் தேகத்தையும் அறுத்து எல்லா உறுப்புகளின் அமைப்பும் கண்ணால் கண்டு தெரிய வேண்டும். உயிருடைய மனிதனை அறுக்க முடியாது பிணத்தையே அறுக்க வேண்டும். மாந்திரம் ரிஷிகள் சொன்னது. பாப்பாரோ ரிஷிகளின் பிள்ளைகள் அப்பொழுது சாஸ்திரங்கள் யாரிடமிருக்க வேண்டும். அந்த சாஸ்திரங்களை தானும் படிக்கவில்லை மற்றவர்களுக்குப் படிக்கக் கொடுக்கவுமில்லை அந்தக் காலத்தில் அச்சில்லை ஒன்றோஇரண்டோ பனை ஓலையில் எழுதின ஏடாக விருக்கும் ஒரு பாப்பானிடமோ அல்லது ராஜாவின் அரண்மனையிலோ அந்த ஏடு இருக்கலாம் ராஜாவின் அரண்மனைக்கும் அந்தக்காலத்தில் அதிகாரி புரோகிதனே பாப்பார்களுக்குத் தொழில் ஞானமும் வேள்வியும்; வைத்தியமல்ல உடற்கூறி லக்கணம் படிக்க பிணத்தை அறுக்க வேண்டு பாப்பான் தன் பிணம் தவிர மற்ற பிணத்தைத் தொடப்படாது தொட்டால் நரகம் வரும் பாப்பார் பிணங்களோ இறந்த உடனே எரித்துவிட்டால் தோஷம் வந்து விடும் சொர்க்கத்திற்குப் போகாது இப்பொழுது கூட பெரிய பணக்காரன் வீடு தவிர மற்ற ஜாதியார் வீட்டிற்கு பிணம் கடுகாடு போன மற்றுமான் தான் ஆளவிருந்து வருவார்கள். க்ஷத்திரியனோ தன் சுற்றத்தார்களின் பிணத்தைக் கூடப் பார்க்கக் கூடாது. அந்த வழக்கத்தை யனுசரித்து இப்பொழுதும் ஜமீன்தார்களும் பட்டக் காரர்களும் பிணத்தைப் பார்ப்பதில்லை. க்ஷத்திரிய பிணமோ மரியாதையோடு புதைக்க வேண்டும். வைசியனோ வேள் தொழில் செய்யாமல் வியாபாரத் தொழிலிலேயே செய்து பாப்பானுக்கு தானமே செய்து கொண்டு அர்ச்சனையும். இனி பிணமோ பணக்காரப் பிணம் அநேக

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(13-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது)

தூதர்கள் வருவதற்கு முந்தின இரவில் பரதன் தசரதனுடைய இறப்பை அறிவிக்கும் சில தீய கனவுகளைக் கண்டு வருந்தியிருந்தான். அப்போது தூதர்கள் அயோத்தியிலிருந்து வந்து கேகய மன்னனையும் அவன் மகன் யுதாசித்தையும் கண்டு பரிசளித்து வசிட்டனும் மந்திரிகளும் அவனை உடனே அழைத்துவரக் கூறியதைப் புகன்றனர். தன்னைப் பெற்றோர் முதலிய எல்லாருடைய நலத்தையும் பரதன் வினவ அவர்கள் ஆமென்று கூறி அவசரப்படுத்தினர். பரதன் தன் கனவாலும் தூதர் அவசரத்தாலும் மனங் கலங்கி விடைபெற்றுப் புறப்பட்டான். அவன் ஏழுநாட்கள் இரவு பகலாகச் சென்று எட்டாவது நாட் காலையில் அயோத்தியில் நுழைந்தான். நகரம் பொலிவு அழிந்திருப்பதைக்கண்டு அவன் மனம் வருந்தி தன்னை விரைவில் வரவழைத்ததால் ஏதோ தீமை நிகழ்ந்திருக்க வேண்டுமெனத் தேரோட்டியிடம் கூறிக்கொண்டு அரண்மனையை யடைந்தான். அவன் தசரதனிருக்குமிடத்தில் அவனைக் காணாமல் கைகேசி வீடு போய் அவளை வினவ கைகேசி தசரதன் இறந்ததைக் கூறினாள். உடனே பரதன் கீழே விழுந்து நெடுநேரம் அழுது "கடைசியாக என் தந்தை யாது கூறினார்?" என வினவினான். கைகேசி "இராமா, சீதை என்று கூவி அவர் உயிரை விட்டார். இராமன் சீதை இலக்குவருடனே அயோத்திக்கு திரும்பும் போது பார்ப்பனர்களே பயன் பெற்றோர் என்று கூறியிறந்தார்" எனப்புகன்றாள். பரதன் "இராமனெங்கே" என்று கேட்க அவள் "இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் காடேகினான்" என்றாள். இதைக்கேட்ட பரதன் தனது அண்ணனுடைய ஒழுக்கத்தில் சந்தேகப்பட்டு விட்டமடைந்தவனாய் "எந்தப் பிராமணனது பொருளையாவது இராமன் பறித்தனனோ? பெண்களைக் கற்பழித்தானோ? பார்ப்பனனைக் கொன்றவனைப் போல இராமனை ஏன் காட்டிற்குத் துரத்திவிட்டார்கள்?" என்று வினவினான். கைகேசி நடந்த வரலாற்றைக் கூறி அவனை முடிசூடிக்கொள்ளச் சொன்னாள். நடந்ததையறிந்த பரதன் "தீயவளே! உன்னால் முறைமை அழிந்தது. நான் இராமனை இப்போது அழைத்துவந்து முடிசூட்டுவேன். உன் மனப்படி நடவேன்" என்று கடிந்துரைத்தான். அவன் மறுபடியும் "பெண்ணுருப்பேயே! இவ்விதமான கொடிய தீமை செய்தாயே. கோசலைக்குப் பிள்ளையைப் பிரிந்துப் பொறுக்க முடியாத துன்பத்தை உண்டு பண்ணி விட்டாய். உன் உயிரைக் கழுத்திற் சுருக்கிட்டாவது விட்டு விடு" என்று சீறினான். அப்போது சுமந்திரன் முதலிய அமைச்சர் வந்தனர். அவர்களை நோக்கி அவன் "நான் ஒரு பாவமும் அறியேன். என்னை இவள் கெடுத்து விட்டாள்" என்று கதறினான். இச்சத்தத்தைக் கேட்ட கோசலை சுமத்திரையுடன் பரதனைப்பார்க்க வந்தாள். பரதனும் சத்துருக்கனுடன் அவளைப் பார்க்கப் போய் வழியில் கண்டு பணிந்தான். கோசலை "பல நாளாக நினைத்திருந்த உன் எண்ணம் ஈடேறியது. கைகேசியும் பல தீமை செய்து இந்நாட்டை உன் வசமாக்கினாள். இனி எதிர்ப்பு ஆர்... என் மகனைக் காட்டிற் கனுப்பியதால் அவள் என்ன பெற்றாள்? உன்னைப் பிரேதக்கிரியைகள் செய்யாமல் தசரதர் நடத்திருக்கிறார். அவருடைய பிரேதத்தை எடுத்துக்கொண்டு இராமனிடம் போகிறேன். என்னை இராமனிடம் கொண்டு போய் விடு" என்று கொடிய சொற்களால் நிந்தித்தாள். பரதன் தன் மனம் நடித்து "அம்மா! எனக்கொன்றும் தெரியாது. நான் மனமாரக் குற்றம் செய்தால் என்னன்னம், பாயாசம், ஆட்டின் மாமிசம் இவைகளைத் தேவதைகளுக்கும் தென்புலத்தாருக்கும் விருந்துக்கும் ஊட்டாமல் தனே உண்கிறவனுடைய தீயகதியை நானடைவேன்" என்று இவ்வாறு பல வஞ்சினங்கூறி அவளைத்தேற்றினான். கோசலை அவனை வாழ்த்திப்புலம்பினாள்.

வசிட்டன் தசரதனுடைய பிணத்தை விரைவில் கொளுத்துமாறு ஏவ பரதன் வருந்தி எண்ணெயிற் கிடந்த சவத்தை எடுத்துக்கொண்டு போய்ச் சரயூ நதிக்கரையை யடைந்தான். அரசனுடைய மனைவிமார் தத்தம ஊர்திகளேறி வந்தனர். பின் மனைவியரும் பிள்ளைகளும் கட்டையிற் கிடந்த சவத்தைச் சுற்றி வந்தனர். பரதன் எரி மூட்டினான். பின் அரசனுடைய மனைவியர் முதலிய எல்லோரும் ஊருக்குத் திரும்பினர். பத்துநாட்கள் கழிந்து பதினோராம் நாளில் புண்ணியாகவாசனம் நடந்தது. பன்னிரண்டாவது நாள் மாசிகம் முதலிய கிரிகைகள் நடந்தன. தசரதனுக்குத் திருப்தியுண்டாவதற்கு பரதன் பிராமணர்களுக்கு வேண்டுவன தந்தான். பின் மூன்றாவது நாள் காலையில் சஞ்சயனம் செய்ய பரதன் சுடுகாட்டுக்குப் போய் தசரதனுடைய எலும்புகளையும் சாம்பலையும் கண்டு புலம்பி வசிட்டன் ஏவலால் அவைகளுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து முடித்தான்

அரண்மனை வந்தவுடன் சத்துருக்கன் "அண்ணா! இராமனாவது அபவாதத்துக்குப் பயந்து காடேகினான். இலக்குவன் என் மன்னனைக் கண்டித்து இராமனுக்கு முடி சூட்டியிருக்கக் கூடாதா?" என்று கூறினான். அப்போது கூனி அங்கே வர சத்துருக்கன் அவளைக் கீழே தள்ளி அடித்தான். அவள் கதறினாள். அவன் பின்னும் அவளைத் தரையில் தள்ளி அங்குமிங்கும் இழுத்து உதைத்தான். அப்போது அவளை விடுவிக்க வந்த கைகேசியையும் அவன் நிந்தித்தான். பரதன் உடனே சத்துருக்கனைக் கண்டித்தான். மறுபடியும் சத்துருக்கன் உதைத்துத்தள்ளி கூனி கை கால்கள் ஒடிந்து கீழே விழுந்து புலம்பினாள். கைகேசி அவளைத் தேற்றினாள்.

ஊரார் கூடி பரதனை முடிசூட்ட வேண்ட அவன் மறுத்து இராமனை அழைத்துவரத் துணிந்து கங்கைக் கரைவரை வழியுண்டாக்கினான். வசிட்டன் குருகுல மன்னர் அமைச்சர் முதலிய அனைவரையும் சபை கூட்டி பரதனை எதிர் கொண்டழைத்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ளக் கூறினான். பரதன் அதைத்தீய சொல் என்று கருதியதால் வசிட்டனை நிந்தித்து சுமந்திரனை நோக்கி சேனைகளைப் புறப்படக்கட்டளையிட ஆணைதந்தான். எல்லோரும் புறப்பட்டனர். பரதன் தேரேறினான். கைகேசி, சுமத்திரை, கோசலையும் புறப்பட்டனர். எல்லோரும் கங்கையை யடைந்து தங்கினர். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

பரதனை அழைத்துவரச் சென்றோரிடம் பரதனிடம் தசரதன் இறந்ததைக் கூறாதிருக்குமாறு வசிட்டன் கட்டளையிடுகிறான். இதனால் தன் தந்தை முதலியோர் நலன் கேட்ட பரதனிடம் அவர்கள் பொய்புகல நேர்ந்தது. வசிட்டன் அவ்வாறு உண்மையைக் கூறாதிருக்க ஆணைதந்தது கேகய மன்னனுக்கு உண்மை தெரிந்தால் அவன் பரதனோடு அயோத்தி வந்து முடிசூட்டிவிடுப்பான். மேலும் தன் மகள் கைகேசியை மணக்கும்போது செய்து கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக தசரதன் இராமனுக்கு முடி சூட்ட முயன்றமைக்கு வசிட்டன் முதலியோர் உடந்தையாயிருந்தது அவன் அறிந்து அவர்களை நிந்திப்பான். ஆதலின் வஞ்சகனாகிய வசிட்டன் உண்மையைக் கூறாது பரதனை அழைத்தால் அவன் மட்டும் அயோத்திக்கு வருவான், அப்போது வேண்டுவன செய்து கொள்ளலாமென நினைத்தான். அவன் சூழ்ச்சியும் பலித்தது. பின் வசிட்டன் குடிகள் சென்று வேண்டியும் பரதன் முடி பெற மறுத்ததையும் அதற்கு முன்னரும் அவன் கோசலையிடம் வஞ்சினமுரைத்து எவ்வாற்றாலும் இராமனை யழைத்துவரத் துணிந்ததையும் அறிந்திருந்தும்கூட மறுபடியும் சபை கூட்டி பரதனை யழைத்து முடிசூட்ட வேண்டுகிறான். இது தன் மேல் குற்றமில்லாமல் தப்பித்துக்கொள்வதற்குச் செய்த சூழ்ச்சியேயாகும். பரதன் வந்த போது அவனுக்கு உண்மையையுரைத்து முடிசூட்டாமல் அவன் உரிமையற்ற இராமனை யழைத்து வந்து முடிசூட்ட ஏன் பார்த்திருந்தாயென கேகயன் வினவில் அப்போது வசிட்டன் அகப்பட்டுக்கொள்வான்; அதனால் வசிட்டனுடைய தீய செய்கைகளும் சூழ்ச்சிகளும் உலகமறியும் போது யாவரும் அவனை இகழ்வார்கள். இவ்வுண்மையை அறியாமலிருந்தும் பரதன் வசிட்டனை அப்போது நிந்திக்கிறான். இதனால் தீமை செய்கிறவர்கள் எவ்வாறாவது நிந்தனையடைவர் என்பது விளங்குகின்றது. இச்சூழ்ச்சியால் வசிட்டன் மற்றொரு நன்மையுமடைகிறான். அதாவது பரதன் சபை முன் வாக்குரைத்தால் அதன்படி நடக்கத்தகுமன், அதனால் அவ்வாறு வாக்குரைக்கச் செய்து தன்னுடைய தீய தோழனாகிய தசரதனுடைய பேராசைப்படி இராமனை யழைத்து வந்து முடி சூட்டிவிடலாம் என அம்முனிவன் நினைத்தான். இதிலும் அவன் வெற்றி பெறுகிறான். இதனால் கேகய மன்னனுக்கு தான் சபை கூட்டி முடி சூட்டப் போனதாகவும் பரதனே மறுத்து விட்டனனென்றும் சமாதானம் கூறிக்கொள்ளலாம், தன்னுடைய சூழ்ச்சிகளும் தசரதன் சூழ்ச்சிகளும் மறையக்கூடும், இராமனும் அரசு பெறுவான். வசிட்டனைப்போன்ற தீயோரும் உளரோ? வேறு கதைகளிலும் கேட்டறிய முடியாதே!

பரதனிடம் கைகேசி தன் கணவன் இறக்கும் போது கூறியவற்றைத் தன்னிடம் கூறியது போலக் கூறுகிறாள். தசரதன் இறக்கும் போது கோசலை அரண்மனையிலேயே இருந்தான். மறுநாளே அவன் இறந்தமையறிந்து அங்கே கைகேசி போகிறாள். இதனால் இவள் இச்சொற்களை பரதனுக்கு தீமையென்று எச்சம் வராமலிருக்கும்படி உண்மையை மறைத்துக்கூறியவளாவள். இச்சொற்களை இவள் எவ்வாறு அறிந்தனளோ?

இராமன் காட்டுக்குப் போய்விட்டானென்பதைக் கேட்ட பரதன் இராமன் ஏதாவது பெரிய குற்றஞ்செய்தே நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டிருக்க வேண்டுமென ஐயுற்று வினவுகிறான். இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் "இராமனுடைய கல்யாண குணங்களைப் பூர்ணமாகவறிந்த பரதன் இப்படிசந்தேகப்படுவதே தகாது" என்றுகுறித்திருக்கிறார். இதுதகுமோ தகாதோ பரதன் இராமனை விபசாரம் முதலியகொடிய குற்றங்கள் செய்திருப்பானோ என்று சந்தேகித்தது உண்மை. பரதன் இராமனுடைய தீய நடைகளை உணர்ந்திருந்தமையின்றான் அவ்வாறு சந்தேகித்தனன் போலும்! ஆனால் அவன் ஏன் இராமனை அழைத்து வந்து முடி சூட்டத் துணிகிறான்? என்றால், பரதன் வீரத்தன்மையுடையோனாகாமல் பயங்காளியாயிருந்தான். மேலும் அவனுக்கு தன் தந்தை செய்த வாக்குறுதியால் நாடு தனக்குரிமையானது என்ற உண்

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# செங்கல்பட்டு மகாநாட்டைத் திறந்து வைக்கையில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் செய்த உபன்யாசம்.

(முன் தொடர்ச்சி)

நமது நாடானது அன்னியர்களால் அடக்கி ஆளப்படுவதற்கும் தரித்திரத்தினால் கஷ்டப்படுவதற்கும் அடிக்கடி அன்னியர் படையெடுப்பினால் தொல்லைப்பட்டு அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும் வெகுகாலமாய் காரணமாயிருந்துவருகிற மத சம்மந்தமாயுள்ள ஆயிரக்கணக்கான குருட்டு நம்பிக்கைகளும் சமூக வாழ்வில் உள்ள சற்றும் மனிதத்தன்மைக்குப் பொருந்தாத மூடபழக்க வழக்கங்களையுடைய ஸ்தாபனங்களும் ஆகிய யோக்கியப் பொருப்பற்ற தன்மைகள் இப்பொழுதே அடியோடு ஒழிந்தாலல்லது நாம் மற்ற நாட்டார்கள் முன்னிலையில் தாழ்த்தப்படாமலும் இழிவு படுத்தப்படாமலும் வாழ முடியவே முடியாது என்பதை உணருவதற்கு இதுவே தக்க சமயமாயிருக்கின்றது.

அன்றியும், புரோகித ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டும், ஜாதி உயர்வு தாழ்வு கொள்கைக்கு உட்பட்டும் மற்றும் மூடநம்பிக்கையுள்ள மக்களால் நடத்தப்பட்டுவரும் பாலிய விவாகங்களை ஏற்றுக்கொண்டும் விதவைகளை மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுக்காமல் அவர்களைப் பரிதாபகரமான வாழ்க்கையில் இருத்திக்கொண்டும் மக்களில் ஒருவகுப்பார் கோவிலுக்கு போனால் கோவிலும் கடவுளும் தீட்டாகிவிடும் என்கின்ற கோவிலையும் கடவுளையும் வணங்கிக் கொண்டு இருக்கும் மட்டும் நமக்கு அரசியல் சுதந்திரம் என்பது (சுயராஜ்யம்) கிடைத்தாலுங்கூட நாம் ஒருக்காலும் சுதந்திரமும் சமத்துவமும் அடைந்த மக்கள் என்பதாக சொல்லிக்கொண்டு அன்னியர் முகத்தில் விழிக்கக்கூடிய யோக்கியதையை அடையமுடியவே முடியாது.



செங்கற்பட்டு மகாநாட்டைத் திறந்துவைத்த சமரமங்கலம் ஜமீன்தாரும் சென்னை அரசாங்க முதல் மந்திரியுமான Dr. P. சுப்பராயன் அவர்கள்.

இப்பேர்ப்பட்ட விஷயங்களுக்காக இதுவரை கூட்டப்பட்ட பல மகாநாடுகளைப் போல் நுனிப்புல்லை மேய்ந்து கொண்டு ஒன்று இரண்டு விஷயங்களைப்பற்றி மாத்திரம் பேசி விட்டு வாய்ப்பேச்சளவோடு காலத்தைக் கடத்தி வருவது போல் இல்லாமல் இந்தச் சுயமரியாதை மகாநாடானது கண்டிப்பாய் எல்லா விஷயங்களையும் பற்றி நன்றாய் யோசித்து மேல்கண்ட கொடுமைகள் நீங்கத்தக்க வண்ணம் காரியத்தில் நடை பெறும்படியானதக்க ஏற்பாடுகளைச் செய்யும் என்றே நான் உறுதியாய் நம்பி இருக்கின்றேன்.

மதத்தைப்பற்றி இப்போது நாம் எந்த நிலையில் இருக்கின்றோமென்று பார்ப்போமானால் ஒவ்வொருவனும் தன்னைப்பொருத்தவரையில் அவனவன் தனிப்பட்ட முறையில் தனது 'ஆத்மா' என்பது எப்படி மோக்ஷலோகத்திற்குப் போவது என்பதிலும் அதற்காக அவன் என்னென்ன செய்ய வேண்டும் என்பதிலுமே கவலை செலுத்தும்படியாகவும் மற்றபடி நாட்டின் பொதுநலத்தைப்பற்றியோ தன்னைச்சுற்றிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏழை மக்களைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலைப்படுவதற்கில்லாமல் இருக்கத்தக்க வண்ணம் மூட்டாள்களும் சுயநலக்காரர்களுமான புரோகிதக் கூட்டத்தாரால் கற்பிக்கப்பட்டு அவர்களது ஆதிக்கத்தில் இருந்துகொண்டு வாழ்வதையே மேலான மார்க்கம் என்பதாக உணர்ந்து அதன்படியே நடந்துகொண்டும் வருகின்றோம் என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். உலகத்தின் பொது நன்மைக்கும் அதிலுள்ள மக்களின்பரோபகாரத்திற்கும் அநுகூலமான கொள்கைகள்தான் உண்மையான மதம் என்கின்ற உணர்ச்சியே நம்மவர்களுக்குச் சிறிதும் கிடையாது. இந்த உணர்ச்சி நமக்கு வரவேண்டுமானால் நம்மைப்பற்றி மாத்திரம் நாம் நினைத்துக் கொண்டிருக்கும் சுயநல உணர்ச்சியை விட்டுவிட்டு நம்மைச் சுற்றியுள்ள மற்ற மக்கள் விஷயத்தில் நமது கருத்தையும் அன்பையும் செலுத்திப் பார்க்கவேண்டும்.

எனவே, மேல்கண்ட இந்த ஒரு முக்கியமான தத்துவமே தான் நமது சுயமரியாதை சங்கத்தில் நாயகமாக விளங்குகின்றது.

இப்பேர்ப்பட்ட உயரிய தத்துவங்கள் கொண்ட இந்த சுயமரியாதை இயக்கம் இப்போது ஒருசரியான கட்டுத்திட்ட விதிகள் கொண்ட முறையில் அமைக்கப்பட்டு வேலை செய்யப்போவதைப்பற்றியும் வருஷா வருஷம் கூட்டங்கள் கூட்டப்படப்போவதைப்பற்றியும் அறிய நான் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

## வாலிபர்கள்.

ஆனால் இவைகள் மாத்திரமே போதாது. நாம் நிறைவேற்றும் தீர்மானங்கள் அமுலுக்குக் கொண்டுவர நமக்கு வாலிபத் தொண்டர்கள் வேண்டும். அவர்கள் சதா சர்வகாலம் ஊர் ஊராய்த் திரியவேண்டும். நம நாட்டிலுள்ள மதப்புரட்டுகளையும் ஜாதிக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெரியப் புறப்பட்டு புகழும் மங்காத கீர்த்தியும் பெருமையும் அடைந்த புத்த பகவானின் சிஷ்யர்களான புத்த சந்நியாசிகளைப்போல் புறப்பட்டு பாமர மக்களிடம் சென்று அயோக்கியத்தனமும் சுயநலமும் கொண்ட மதசூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் கட்டுப்பாடுகளையும் உடைத்தெரியத்தக்க இளஞ்சிங்கங்கள் நமக்கு வேண்டும். நல்ல பிரசாரம் என்பது வெறும் வாய்ப்பேச்சென்று நடத்தையில் நடந்து காட்டுவது என்பதையும் மறந்து விடக் கூடாது.

எனவே, இந்த வேலையில் உண்மையாகவே கவலையுள்ள நாம் எல்லோரும் இம்மாதிரி கூட்டங்களில ஆஜராவதிலும் மேடையில் ஏறிப் பேசுவதிலும் நமது கடமை தீர்ந்து விட்டது என்று எண்ணிவிடாமல் ஒவ்வொரு நாளும் நமது வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு துறையிலும் நமது மனம், வாக்கு, காயம் ஆகிய எல்லாவற்றிலும் இக்கொள்கைகளையே புகுத்தி அதற்காகவே நாம் பாடுபடவேண்டும். அந்தப்படியே நாம் எல்லோரும் நடப்போம் என்றே நான் நம்புகின்றேன். ஆதோடு,

(இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

செங்கல்பட்டு மகாநாட்டின்

# தீர்மானங்களும் ஜஸ்டிஸ் பத்திரிகையும்.

செங்கற்பட்டுத் தீர்மானங்களைக் குறித்து ஜஸ்டிஸ் பத்திரிகை எழுதிய அபிப்பிராயங்களைப்பற்றி, சென்றவாரம் அதாவது கடவுள் வணக்கத்திற்கு பணம் செலவு செய்யவேண்டுமா என்பதைப்பற்றி எழுதிவிட்டு, கல்யாணம், கல்யாண ஒப்பந்தவிலக்கு என்கின்ற விஷயங்களைப்பற்றி இவ்வாரம் எழுதுவதாய்க் குறிப்பிட்டிருந்தோம்.

## கல்யாணம்.

கல்யாணம் என்பது என்ன? அது மக்களின் வாழ்விற்கும், இயற்கை உணர்ச்சிகளுக்கும் அவசியமான ஒரு சாதனமே ஒழிய மற்றபடி வேறு ஏதாவது அதாவது "தெய்வீகத்தன்மை" கற்பிக்கக்கூடியதான விஷயங்கள் அதில் என்ன இருக்கின்றது என்பதை நாம் அறிய முடியவில்லை. ஒரு மனிதன் தன் வாழ்க்கைக்கும் திருப்திக்கும் இன்பம் அனுபவிப்பதற்கும் எப்படி சொத்து, உத்தியோகம், கீர்த்தி, நல்ல துணிமணிகள், அழகும் அறிவும் உள்ள குழந்தைகள், அதிகமான சவுகரியமும் பெருமையும் தரத்தக்க வீடுகள், மனமொத்த நண்பர்கள் ஆகியவைகளை அடைய விரும்புகின்றானோ அதுபோலவே ஒரு ஆண் ஒரு பெண்ணையும் ஒரு பெண் ஒரு ஆணையும் வாழ்க்கைத் துணையாக விரும்புவதும் அவ்விருப்பப்படி ஒருவரை ஒருவர் தெரிந்தெடுத்துத் தங்களுக்குள் திருப்தி உண்டானபின் தங்கள் இருவருடைய வாழ்க்கைக்கும் இன்பத்திற்கும் ஒத்தபடி செய்துகொள்ளும் ஒப்பந்தந்தான் கல்யாணம் என்று சொல்லப்படுவதாகும். எனவே இதில் "தெய்வீகத்திற்கோ" 'ஆத்மார்த்தத்திற்கோ" என்னவேலை இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை.

சொத்து வீடு ஆடை ஆபரணங்கள் குழந்தைகளிடம் கொஞ்சுதல் சிநேகிதர்களின் மூலம் மகிழ்ச்சி அடைதல் ஆகியவற்றிலும் ஆத்மார்த்தமும் தெய்வீகமும் இருக்கின்றது என்றால் அந்த அளவுக்கு ஆத்மார்த்தத்தையும் தெய்வீகத்தையும் கல்யாணத்திலும் வைத்துக்கொள்வதில் நமக்கு அதிக கவலை இல்லை. ஆனால் "அவைகள் எல்லாம் மானுஷீகத்தில் சேர்ந்தது கல்யாணம் மாத்திரம் தெய்வீகத்தில் சேர்ந்தது" என்றால் அதை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமுடியவே முடியாது என்கின்றோம். அன்றியும் மற்றெல்லா விஷயங்களையும்விட மானுஷீக வாழ்க்கையில் கல்யாணம் என்பது ஆண் பெண் இருபாலர்க்கும் மிகவும் தெளிவானதாகவும் மற்றெல்லாவற்றையும்விட அதிக சுதந்திரமும் சுயேச்சையும் உடையதாகவும் இருக்கவேண்டுமென்றும் சொல்லுவோம். ஏனெனில் கல்யாணம் என்பதில் ஆண்பெண் இருவருக்கும் அதிக நம்பிக்கையும் ஒற்றுமையும் வேண்டியிருப்பதால் இருவருக்கும் தெளிவும் சுதந்திரமும் அதிகம் வேண்டியிருக்கின்றதென்கின்றோம். ஆனால் இப்போதைய பெரும்பான்மையான கல்யாணங்கள் என்பவைகள் ஒருசிறிதும் மனிதத்தன்மைக்கு பொருந்தினவையல்ல வென்றே சொல்லுவோம். முதலாவது ஆணும் பெண்ணும் அல்லது ஆணோ பெண்ணோ அறியாமைப்பிராயத்தில் இருக்கும்போதே கல்யாணங்கள் வேறு ஒருவரால் நடத்தப்படுவது. இரண்டாவது தாலிகட்டும் சடங்கு வரையில் சில சந்தர்ப்பங்களில் தாலிகட்டி சில நாள் ஆகும் வரையில் கூட ரூபத்தைப்பொறுத்த வரையில் கூட பெண் எப்படிப்பட்டது என்று ஆணுக்குத் தெரியாமலும் ஆண் எப்படிப்பட்டது என்று பெண்ணுக்குத் தெரியாமலும் இருக்க நேரிடுவதோடு, குணங்களைப்பற்றியோ வென்றால் கல்யாணமாகி 2, 3, 4, வருஷங்களுக்குக்கூட இருவர் குணங்களையும்பற்றி ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ள முடியாமலும் சில சந்தர்ப்பங்களில் சரீர சம்பந்தமாகி 3, 4 வருஷங்கள் வரையில்கூட ஒருவரை ஒருவர் நன்றாய்த் தெரிந்துகொள்ள முடியாமல் இருப்பதோடு ஆண் பெண்ணைப்பற்றி சிறிதும் கவலை இல்லாமல் இருப்பதும் பெண் ஆணின் தாய் தகப்பன்மாருக்கும் அடிமையாக வாழ்க்கைப்பட்டதாகக் கருதிக்கொண்டு ஒரு வேலையாளாகவே இருக்கவேண்டியதோடு வெறும் ஒருவனுடைய புணர்ச்சி உணர்ச்சிக்காகத்தான் தயாராய் அவனுடைய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருக்கவேண்டியதான ஒரு கருவியந்திரம்போல் இருப்பதும் பெண் தனக்கு தன் தேவைக்குத் தேவையான சமயத்திற்கு எந்தவித பரிகாரமும் கிடையாது என்பதாகத் தீர்மானித்து தனக்கும் இயற்கை உணர்ச்சி என்று ஒன்று இருப்பதாகவே கருதக்கூடாது என்றும் நிர்பந்தப்படுத்தி வருவது போலவும் இருக்கின்றது. இதை யாராவது மறுக்கமுடியுமா என்று கேட்கின்றோம்.

அன்றியும் ஒரு பொது மகள், அல்லது விலைமகள் என்பவள் தனக்குள்ள இயற்கை உணர்ச்சியைத் தன் இஷ்டம்போல் அனுபவிக்கவும் அதற்கும் தன் இஷ்டம்போல் விலை பெறவும் வாழ்க்கையில் தன் இஷ்டம்போல் சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் இருக்கவும் நமது சமூகத்தில் தாராளமாய் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வாழ்க்கையில் ஈடுபடுத்தப்பட்ட "தெய்வீகம்" என்று சொல்லத்தக்கதான கல்யாணம் செய்துகொண்ட நமது பெண்கள் வெறும் வாரிசு வளர்ப்புக்காகவும் உடலைமறைக்கும் துணிக்காகவும் மாத்திரம் வேறு மனிதனுக்குத்தான் ஒரு அறிவும் உணர்ச்சியும் அற்ற கருவி யந்திரம்போல் இருந்துகொண்டு இருக்கவேண்டியதாயிருக்கின்றது. பெண்ணுக்கு புருஷனிடமிருந்து எவ்வித ஒப்பந்தமும் வாங்க உரிமை இல்லை. அவன் தன்கையால் தாலிகட்டிய பெண்ணை அன்று முதலே வேண்டாம் என்று சொல்லிவிடலாம். (சொல்லி விடுகிறார்கள்). தாலிகட்டும் முன்பும் தனக்கு வேறு பல பெண்களிடம் சாகவாசமும் ஒப்பந்தமும் இருக்கலாம்.

மற்றும் சில பெண்களையும் பெண்டாட்டியாகக்கட்டிக்கொண்டு வாழலாம் அல்லது தான் முறைப்படி தாலிகட்டி கல்யாணம் செய்துகொண்ட பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு வேறொரு பெண்ணை வைப்பாட்டியாக அதே வீட்டில் வைத்துக்கொண்டு அந்த வைப்பாட்டியையும் பெண்டாட்டியையும் ஒன்றுபோலவே நடத்துவதும் சில சமயங்களில் வைப்பாட்டியைப் பெண்டாட்டியைவிட உயர்வாக நடத்துவதும் சிலசமயங்களில் பெண்டாட்டியை வைப்பாட்டிக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிசெய்து வீட்டு நிர்வாக அதிகாரத்தை வைப்பாட்டியிடம் ஒப்புவித்துவிடுவதும், இவ்வளவும் செய்வதோடு மாத்திரம் நின்றுவிடாமல் ஆண் அந்த வைப்பாட்டியிடமே காதல்வைத்து அவளுடன் கூடவே இன்பம் அனுபவித்துக்கொண்டு பெண்டாட்டியை வேலைக்காரி போலாகவும் தொடக்கூடாதவள் போலவும் கருதி நடத்திக்கொள்ளுகின்றான். இவையாவையும் பிரத்தியக்ஷத்தில் பார்க்கின்றோம். இவைகள் ஜஸ்டிஸ் பத்திரிகைக்குத் தெரியாதா என்று கேட்பதோடு இவற்றிற்கு, இப்போதுள்ள மதக்கொள்கைகளும் கல்யாண முறையும் அல்லவா காரணம் என்றும் கேட்கின்றோம். சுயமரியாதையின் பேரால் சீர்திருத்த நோக்கத்தோடும் சமத்துவ நோக்கத்தோடும் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில் இவ்விதக் கெடுதிகள் ஒழியத்தகுந்தமாதிரியான ஒரு தீர்மானம் அதுவும் ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்க்கைத் துணையாகவும் காதலர்களாகவும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியவர்களைத் தாங்கள் தாங்களாகவே தங்கள் இஷ்டப்படி தெரிந்தெடுத்துக்கொள்ள ஒரு தீர்மானம் தீர்மானிப்பது தகுதியற்றது அல்லது ஒப்புக்கொள்ள முடியாதது என்று சொல்வதானால் மற்றென்ன காரியம் தான் மக்கள் முன்னேற்றத்திற்கோ மனித சுதந்திரத்திற்கோ பெண்கள் முன்னேற்றத்திற்கோ உரிமைக்கோ ஏற்றது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தீர்மானம்கூட இந்நாட்டு மக்களுக்கு கஷ்டமாயிருக்குமானால் அதற்கு பதிலாக மக்களுக்குள் கல்யாணம் என்கின்ற ஒரு முறையே கூடாது என்று தான் நாம் சொல்லித்தீரவேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் இன்பத்திற்காக கல்யாணம் என்றால் அதற்கேற்ற முறையில் கல்யாணத் திட்டம் அமைக்கப்படவேண்டுமே ஒழிய மற்றபடி இன்பமும் காதலும் இல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும் உலக விருத்திக்கு என்று பலபல பிள்ளைகளைப் பெறுவதற்கும் ஆண் மக்களுக்கு, அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதானால், அம்மாதிரி கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதை விடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரத்தோடு நடந்துகொள்வதையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சியில் சம சந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கல்யாணங்களை காம விபசார வாழ்க்கை என்று தான் சொல்லவேண்டியிருக்கின்றது.

ஏனெனில் காம விபசாரம் என்பதற்குக்

(இதன் தொடர்ச்சி 15-ப் பக்கம் பார்க்க)

# தேவர்களின் முறை.

சித்திர புத்திரன் எழுதுவது.

லண்டன்மா நகரமாகிய வைகுண்டத்திலே ஜார்ஜ் மன்னராகிய மகாவிஷ்ணுவானவர் பார்லிமெண்டு என்னும் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கின்றார்:—

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கே. நடராஜன், சி. ராஜகோபாலாச்சாரி, வி. எஸ். சீனிவாசசாஸ்திரி, எஸ். சீனிவாசய்யங்கார், சிவசாமி அய்யர், வெங்கிட்டரமணசாஸ்திரி, சி.பி. ராமசாமி அய்யர், டி. ரங்காச்சாரி, டி. ஆர். ராமச்சந்திரய்யர், எம். கே. ஆச்சாரி, சத்தியமூர்த்தி முதலாகிய அநேக பூதேவர்கள் போய் கால்மாட்டில் நின்றுகொண்டு தவம் செய்கின்றார்கள்.

மகாவிஷ்ணு: (தேவர்கள் தவத்தற்கிரங்கி) ஹே பூதேவர்களே! எங்கு வந்தீர்கள்?

பூதேவர்கள்- ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா தங்களிடம் தான் வந்தோம்.

ம—வி-என்ன விசேஷம்.

பூ-தே-தேவர்களுக்கு ஏதாவது இடுக்கண் வந்தால் அதைத் தடுக்க தங்களையன்றி இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்? எனவே தங்களிடம் வந்தோம்.

ம-வி- என்ன விசேஷம்?

பூ-தே- மகாப்பிரபூ பழையபடி ராக்ஷதர்களுடைய ஆதிக்கம் வலுத்து விட்டது. பூதேவர்களாகிய எங்கள் நிலை இருப்பதா இறப்பதா என ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது. இந்த சமயம் தாங்கள் அருள்புரியவில்லையானால் பூலோகமே சாம்பலாய்ப்போய்விடும். பூலோகமே இல்லையானால் மகாவிஷ்ணுவாகிய தாங்கள் பட்டினிகூட கிடந்தாற்போலாய்விடும். தங்களைவணங்கவோ தங்களுக்கு பூஜை ஆராதனைகள் உற்சவம் முதலியவைகள் செய்யவோ கூட யாரும் இருக்க மாட்டார்கள். வணங்காததும் பூஜிக்காததுமான பகவான் இருந்தென்ன ஒழிந்தென்ன? எனவே இந்தச்சமயம் தாங்கள் கிருபை கூர்ந்து எங்களைக் கடாக்ஷித்தருள வேண்டும்.

ம-வி- என்ன! என்ன!! உங்களுக்கு அப்பேர்ப்பட்ட கஷ்டம் என்ன வந்தது? சங்கதியைச் சொல்லுங்கள்.

பூ-தே- பிரபுவே முன் யுகங்களில் தேவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் போல இப்போது பெரிய ஆபத்துகள் வந்திருக்கின்றது.

ம-வி- எப்படி வந்திருக்கிறது? சீக்கிரம் விவரமாய்ச் சொல்லுங்கள்.

பூ-தே எப்படியோ வந்து விட்டது. பெரிய உபத்திரவமாய்இருக்கின்றது. ஒவ்வொரு யுகங்களிலும் தேவர்களுக்கு இடர்கள் செய்ய அசுரர்களாகவும் அரக்கர்களாகவும் ராக்ஷதர்களாகவும் வந்து எங்களை இடர்கள் செய்யும்போது பகவானாகிய தாங்கள் தான் பல அவதாரங்களாக வெளிக்கிளம்பி இராக்ஷதர்களை எல்லாம் அழித்து எங்களையும் எங்கள் உயர்வாகிய வேதங்களையும் உத்தியோகங்களாகிய யாகத்தையும் காத்தருளி வருகிறீர்கள்.

ம-வி- ஆம் அது உண்மைதான்.

பூ-தே- பிரபுவே இந்த யுகத்திலும் அது போலவே ஒரு ராக்ஷதன் தோன்றி விட்டான் அவன் எங்களுடைய பெரிய பெரிய உத்தியோகமாகிய யாகத்திலும் வேதத்திலும் கையை வைத்து அவைகளையெல்லாம் அடியோடு ஒழிக்கப் பார்க்கின்றான்.

ம-வி- அப்படிப்பட்ட ராக்ஷதன் யார்

பூ-தே- பிரபுவே அவன் தான் சுயமரியாதை என்று சொல்லப்பட்ட இராக்ஷதன். அவன் இப்போது தேவர்களாகிய எங்களுக்கு மாத்திரம் துன்பம் விளைவிக்கின்றான் என்றோ எங்களுடைய உத்தியோகங்களாகிய யாகத்தை மாத்திரம் அழிக்கின்றான் என்றோ கவலையீனமாய் இருந்து விடாதீர்கள். நாங்கள் ஒழிந்தால் பகவானாகிய தாங்களும் ஒழிந்து போவது நிச்சயம். ஏனென்றால் எங்களை ஒழித்தால் தான் தங்களை ஒழிக்க முடியுமென்று நினைத்து முடிவு செய்து தங்களை ஒழிப்பதற்காகவே முதலில் எங்களை ஒழிக்கின்றானும்.

ம-வி- அப்படியா அப்பேர்ப்பட்ட ராக்ஷதனா அவன், அவனுக்கு இவ்வளவு சக்தி எப்படி வந்தது?

பூ-தே- அவன் மகா தவசிரேஷ்டன் பெரிய பெரிய தபங்கள் செய்து அதன் மூலம் பெரிய பெரியவரங்களைப் பெற்றுவிட்டான் அன்றியும் தக்க ஆயுதங்கள் அவனிடமிருக்கின்றன. அவ்வாயுதங்களுக்கு பயந்து கொண்டு சில்லரை தேவதைகளும் தங்கள் பரிவாரங்களும் கூட அவனது பரிவாரங்களாக இருக்கின்றன. அவனைக் கண்டால் நடுங்காத முனிகள் இல்லை. ரிஷிகள் இல்லை,

ம-வி- அப்படியா அவன் செய்யும் கொடுமை என்ன.

பூ-தே- மதம் பொய்என்கின்றான். வேதம் பொய் என்கின்றான் புராணம் பொய் என்கின்றான். பாராசர்ஸ்மிருதி பொய்யாம். மனுதர்மசாஸ்திரம் பொய்யாம். எல்லாம் பொய் என்கின்றான். ராமாயணம் பொய்யாம். பாரதம் பொய்யாம் திருவிளையாடல் புராணம் பொய்யாம் பெரியபுராணம் கூட பொய்யாம். தேவர்களைக் கண்டதார் விஷ்ணுவைக் கண்டதார் சிவனைக் கண்டதார். எல்லோரும் பொய் என்கின்றான். இருக்கின்றதாக அகச்சான்று புறச்சான்று காட்டினாலோ காட்டுகின்றவர்கள் எல்லோரையும் அயோக்கியர்கள் அன்னக்காவடிகள் என்கின்றான். அவனுடைய உபத்திரவத்தினால் புராணங்களே விற்பனை ஆவதில்லை. காலக்ஷேபங்களே நடைபெறுவதில்லை. இவைகள் போனாலும் போகட்டும், எங்கள் யாகங்கள் நடைபெறுவதில்லை. அதனால் எங்களுக்கு வெகு கஷ்டமாயிருக்கின்றது.

ம-வி- அப்படியா சொல்லுகின்றான்,

பூ-தே- ஆமாம் பகவானே!!

ம-வி- இன்னம் என்ன செய்கிறான்?

பூ-தே- நாள் பொய் என்கின்றான் திதி பொய் என்கின்றான், சடங்கு பொய் என்கின்றான் தேர் பொய், திருவிழா பொய், என்கின்றான்.

ம-வி- சரி இவ்வளவையும் பொய் என்கின்றானா!

பூ-தே- ஆம் பிரபூ மற்றும் இவனுடைய உபத்திரவத்தினாலே புஸ்தகக்கடைக்காரன் பட்டினி புராணக்கடைக்காரன் பட்டினி புராணப் பிரசங்க பண்டிதன் பட்டினி புரோகிதன் பட்டினி, அர்ச்சகன் பட்டினி, குருமார் பட்டினி, சமயப்பிரசாரகன் பட்டினி, நல்ல ஆங்கிலம் படித்த சாஸ்திரிகள், சாதுக்கள் எல்லாம் பட்டினிகிடக்கும்படியாகிவிட்டது. இதைப்பற்றி கேட்டால் மூட்டைதூக்கிமண்வெட்டி வயிறுவளர்க்கச்சொல்லுகிறான் கொடுமை! கொடுமை!! சகிக்க முடியவில்லை.

ம-வி-நமது கடவுள் தன்மையைப்பற்றி என்ன சொல்லுகின்றான், அதையாவது ஒப்புக் கொள்ளுகின்றானா இல்லையா.

பூ-தே கடவுளைப் பற்றி சொன்னால் எனக்கு அவசியமில்லை என்கின்றான். கடவுள் உண்டா இல்லையா என்றால் நான் அதைப் பற்றி கவலைப்படுவதே கிடையாது என்கின்றான். கடவுள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அதைப்பற்றி உனக்கென்ன கவலை என்கின்றான்.

ம-வி-பின்னை அவன் எதைத்தான் ஒப்புக் கொள்ளுகின்றான்.

பூ-தே-அவன் மனிதனுக்கு மனிதன் அன்பு இரக்கம் உதவி ஒழுக்கம் இவற்றைத்தவிர மற்றொன்றையும் மதிப்பதில்லை என்கின்றான்.

ம-வி- அப்படியானால் இவற்றை எல்லாம் உலகம் ஒப்புக் கொள்ளுகிறதா?

பூ-தே-ஒப்புக் கொள்ளுகிறதே. இதுதானே ஆச்சரியமாய் இருக்கின்றது. ஒப்புக் கொள்ளுவது மாத்திரமா, இந்தச் சமயம்நாங்கள் தெருவில் ஒண்டியாய்ப் போகிறதே ஆபத்தாய் இருக்கிறது.

ம-வி-நீங்கள் என்ன செய்தீர்கள். நீங்களும் எதிர்த்துப் போர் செய்வதுதானே.

பூ-தே-நாங்களும் எங்களால் கூடியவரை பார்த்தோம். எங்கள் ஆயுதங்களாக அந்த ராக்ஷதக்கூட்டத்திலிருந்தே சில ஆட்களைக் கைப்பற்றி அதன் மூலமாகவும் போரிட்டுப் பார்த்தோம். அவர்கள் ஆயுதங்களும் எங்கள் ஆயுதங்களும் நாங்கள் கூலிக்குப்பிடித்த ஆயுதங்களும் எல்லாம் அவன் ஆயுதங்களுக்கு முன்னால்முனை மழுங்கிப் போய் விட்டது,

ம-வி-அப்பேர்ப்பட்ட அந்த ராட்சதனுடைய ஆயுதந்தான் என்ன.

பூ-தே- குடி அரசு, திராவிடன், குமரன், நாடார்குலமித்திரன், தமிழன், விஸ்வநேசன். சிங்கப்பூர்முன்னேற்றம் சுயமரியாதைத் தொண்டன், முதலிய அநேக ஆயுதங்களின் வலிமை எங்கள் ஆயுதங்களின் முனைகளை எல்லாம்மழுங்க வைத்துவிட்டன எங்கள் கூலி ஆயுதங்களும் உரையில்லாமல் வெளியே தலைகாட்ட முடியவில்லை. இப்போது நாங்கள் செத்த பாம்பை ஆட்டுவதுபோல் பொய் வேஷம் போட்டுக் கொண்டு திரிந்து பார்த்தும் வேறு மார்க்கமில்லாததால் தங்கள் பாதத்தில் வந்து விழுந்து விட்டோம். தாங்கள் தான் எங்களைக்காப்பாற்ற வேண்டும். தங்கள் பரிவாரங்களான சைமன் கமீஷன் என்னும் உபதேவர்களை நாங்கள் அறியாமல் பகிஷ்காரம் செய்து விட்டோம். அதைத்தப்பு செய்து மன்னிக்க வேண்டும்.

ம-வி-இதற்காக என்னை என்ன செய்யச் சொல்லுகின்றீர்கள்.

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## திரு. ராஜகோபாலாச்சாரியாரின் பஞ்சநிவாரணப் புரட்டு.

சேலம் ஜில்லா திருச்செங்கோட்டிற்குப் பக்கத்தில் புதுப்பாளையம் என்கின்ற கிராமத்தில் திரு. ராஜகோபாலாச்சாரியார் கதரின் பேரால் ஒரு ஆசிரமம் வைத்துக்கொண்டு மது விலக்குப் பிரசாரம் செய்வதாகவும் பஞ்சநிவாரண வேலை செய்வதாகவும் அங்குள்ள ஏழை மக்களுக்கு கூலி கொடுப்பதாகவும் தானியம் கொடுப்பதாகவும் அடிக்கடி பத்திரிகைகளில் எழுதிக்கொண்டும் திரு. காந்தியை விட்டுத்தன்னை விளம்பரம் செய்யச்செய்தும் இதன் பலனைப் திரு. காந்தி சிபார்சின் மீது வெளி இடங்களில் இருந்து பணம் வரும்படியாகச் செய்துகொண்டும் சூழ்ச்சிகள் செய்து பெரிய ஆர்பாட்டங்கள் செய்து வருகிறார்.

இந்தச்சூழ்ச்சியும் ஆர்பாட்டமும் அடுத்த சட்டசபைத் தேர்தலில் சேலம் ஜில்லா மக்கள் பூராவையுமே ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுக்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் வைத்தே செய்து வருகின்றார்கள்.

இவர் சென்ற தேர்தலின் போதும் இதே மாதிரி மதுவிலக்கின் பேரால் செய்த பிரசாரங்களும் அவற்றின் மூலம் திரு. சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் போன்ற பல பார்ப்பனர்களுக்கு வாங்கிக்கொடுத்த ஓட்டுகளும் மற்றும் திரு. காந்தியை விட்டு திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்லுகின்றவர்களுக்கே ஓட்டுக்கொடுங்கள் என்று எழுதச்செய்த சூழ்ச்சியும் மக்கள் அறிந்ததேயாகும். ஆனால் அந்தத்தேர்தல் நடந்த பிறகு இச்சூழ்ச்சிகளால் ஓட்டுப்பெற்ற சுயராஜ்யக்கட்சியாரோ அல்லது காங்கிரசுக்காரரோ அல்லது சுதந்திரக்கட்சியரோ செய்த வேலை என்ன என்று கேட்கின்றோம்.

கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்து பெரிய பூசாரி ஆய் விடுவது போல் திரு. காந்தியைக் கொண்டு பணம் வசூலிப்பதும் அப்பணத்தைக் கொண்டு மாதம் 50, 100, 150, 200 என்பதாக பார்ப்பனர்களுக்குச்சம்பளம் கொடுத்துப் பல பார்ப்பனர்களை வளர்ப்பதும், பார்ப்பனரல்லாதாரில் ஏதாவது ஒன்று இரண்டு பேர்களை அதுவும் முட்டாள்களாகத் தேடிப் பிடித்து அவர்களை வைத்துக் கொண்டு பார்ப்பனரல்லாதார்களையும் தான் சேர்த்துக்கொண்டிருப்பதாகப் பொதுஜனங்களை ஏமாற்றுவதும் ஆகிய இந்தப்பித்தலாட்ட காரியத்தினாலேயே பார்ப்பனரல்லாதாரை நிரந்தரமாய் ஏமாற்றலாம் என்று கருதி இருக்கின்றார். ஆதியில் இந்த ஆச்சிரமம் பெரிதும் பஞ்சமர்கள் என்பவர்களையே பிரதானமாகக்காட்டி ஏற்படுத்தியதாகும். அந்த பெயராலேயே பொதுஜனங்களிடம் பணமும் வசூலிக்கப்பட்டது. எனவே அப்பேர்பட்ட ஒரு ஆச்சிரமத்தில் தீண்டாதார் என்பவர்கள் எத்தனைபேர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றார் என்பதும் பார்ப்பனரல்லாதாரிடமிருந்தே கொடுக்கப்பட்ட பூமியால் பார்ப்பன ரல்லாதாரிடமிருந்தே வசூலிக்கப்பட்ட பணத்தில் நடைபெறும் ஆச்சிரமமான புதுப்பாளையம் ஆச்சிரமமென்பதில் இப்போது இருக்கும் பார்ப்பனர் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு கொடுக்கும் சம்பளம் எவ்வளவு? பார்ப்பனரல்லாதார் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு ஆள் 1க்கு கொடுக்கப்படும் மாதச்சம்பளம் எவ்வளவு? ஆகிய இவைகளை கவனித்தால் ஆச்சிரமப்புரட்டும் ஆச்சாரியாரின் பஞ்சநிவாரணப் புரட்டும் தீண்டாமை விலக்குப் புரட்டும் கதர்தொண்டுப்புரட்டும் தானாகவே ஒரு மூடனுக்குக்கூட விளங்கிவிடும். நிற்க இச்சூழ்ச்சிகள் நடக்கும் இவ்வாச்சிரமத்திற்காகத் திரு காந்தியின் சிபார்சைக் கேட்டுக்கொண்டு வடநாட்டிலும் தென்னாட்டிலும் சில வைத்தியர்கள் பணத்தை அள்ளிக்கொடுப்பதைப்பற்றியோ அவைகளை பொதுநலத்தின் பேரால் சில பார்ப்பனர்களைத் தின்று கொழுக்கச்செய்யும் ஆச்சிரமங்களைப் பற்றியோ நமக்குச்சிறிதும் கவலையில்லை ஆனால் இந்தப் புரட்டுகளும் யோக்கியப்பொருப்பற்ற காரியங்களும் சமீபத்தில் வரப்போகும் அடுத்த சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார்கட்சியை ஒழிப்பதற்கு என்று செய்யப்படும் சூழ்ச்சியென்பதை அறியாமல் எங்கு பார்ப்பனரல்லாதமக்கள் ஏமாந்துபோய்ப்பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் தங்கள் ஓட்டுகளைக்கொடுத்துப்பார்ப்பனரல்லாதசமூகத்திற்கே தீங்கு விளைவித்துக் கொள்ளுவார்களோ என்கின்ற விஷயத்தில் தான் நாம் கவலைப்படுவதோடு பொதுமக்களையும் உஷாராயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

## பஹிஷ்காரத்தின் இரகசியமும் "தலைவர்களின்" யோக்கியதையும்.

சென்ற வருஷம் சென்னையில் சைமன் கமிஷன் வந்திறங்கிய போது சில பார்ப்பனர்களின் பஹிஷ்காரப் புரட்டு வெளியாய் விட்டதின் பலனாய் சென்னையில் இருக்கும் பார்ப்பனர்களுக்கு எல்லாம் அடிவிழும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டதாலும் அதனால் சில பார்ப்பனர்கள் ஊரை விட்டே ஓடவேண்டியதாய் ஏற்பட்டு விட்டதாலும் சென்னைப் பார்ப்பனர்களில் பலர் பார்ப்பன சமூகத்தின் பேரால் தாங்கள் சைமன் கமிஷனை வரவேற்கின்றோம் என்று விளம்பரப்படுத்திக் கொண்டதோடு சில அரசியல் பார்ப்பனத் தலைவர்களான திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்கார் முதலியவர்களிடமும் சண்டைக்குப் போய் விட்டார்கள். அதாவது "பஹிஷ்காரம் என்று வாயில் சொல்லி விட்டுநீங்கள் டெல்லிக்குப் போய் பங்களாநிழலில் உட்கார்ந்து கொள்ளுகின்றீர்கள்" நாங்கள் அடிபடவேண்டியிருக்கின்றது என்றும் "இக்கபட்டணத்திலேயே இருந்து பஹிஷ்காரம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுகின்றீர்களா அல்லது நாங்கள் ஊரை விட்டும் போய் விடுவதா" என்று மிரட்டலுடன் கேட்டார்கள். அதற்கு ஆகவே திருவாளர்கள் சீனிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி முதலியவர்கள் நாங்கள் கடை அடைக்கப் போவதில்லை என்றும் கூட்டம் போடுவதில்லை என்றும் சர்க்கார் உத்திரவில்லாமல் தெருவில் தலை காட்டுவதில்லை என்றும் மற்ற பார்ப்பனர்களுக்குவாக்குக்கொடுத்ததுடன் சர்க்காருக்கும் போலீஸ் கமிஷனர் மூலம் தெரிவித்து விட்டுப்பொதுமக்களை ஏமாற்ற வேண்டி சைமன் கமிஷன் நடக்காத ஏதாவது ஒரு தெருவில் சில குறிப்பிட்ட நபர்களுடன் ஊர்வலம் செல்லமாத்திரம் அனுமதி கேட்டுக்கொண்டார்கள். போலீஸ்கமிஷனர் 'சைமன் கமிஷன் வரும் வீதியில் வேண்டுமானாலும் நீங்கள் ஊர்வலம் போகலாம் நான்பந்தோபஸ்து கொடுக்கின்றேன்" என்று சொல்லியும்கண்டிப்பாய்கமிஷன் போகாத வீதியிலேயே ஊர்வலம் போக உத்திரவு பெற்றதோடு அதற்கும் பந்தோபஸ்தும் பெற்றுக் கொண்டார்கள்.

இதை அறிந்த ஆந்திர தேசத்து பார்ப்பனர்கள் போலீஸ்கமிஷனரோடு சென்னை பார்ப்பனர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டதை அறிந்து தாங்கள் நேரில் பஹிஷ்காரம் நடத்துவதாய் ஆர்பாட்டம் செய்தார்கள். சர்க்காரார் அவர்களைப் பிடித்து அரஸ்டு செய்தவுடன் அவர்களும் தங்களை வெளியில் விட்டால் உடனே ஊருக்குப் போய் விடுகின்றோம் என்கின்றதாகவாக்குக் கொடுத்துவிட்டுவெளியில்வந்துவிட்டார்கள். இந்த இரண்டு விஷயங்களும் சென்னை பார்ப்பனர்களும் ஆந்திரப்பார்ப்பனர்களும் பத்திரிகைகளுக்கு ஒருவரை ஒருவர் தூற்றி எழுதிய சேதிகளிலேயே அறியக்கிடக்கின்றது. பஹிஷ்காரத்தின் யோக்கியதை இப்படி இருக்க வேறு பல பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்தின் பேரால் தாராளமாய் சைமன் கமிஷனிடம் சென்று தங்கள் சமூக நன்மைக்குத் தேவையான காரியங்களை எடுத்துச்சொல்லி விட்டு வந்து விட்டார்கள்.

அவர்கள் சொல்லியிருக்கும் விஷயங்களை அடுத்த வாரம் வெளிப்படுத்துவோம்.

பொதுவாக சைமன் கமிஷனைப்பஹிஷ்கரித்து தங்கள் சங்கதியை அவர்களிடம் எடுத்துச்சொல்லாதவர்கள் யார் என்பதும் சைமன் கமிஷனர்கள் உத்தேசித்து வந்தகாரியங்களில் எது தடைப்பட்டுப்போய் விட்டதுஎன்பதும் முக்கியமாக யோசித்துப் பார்க்கவேண்டியதோடு காங்கிரஸ்மகாசபை என்பதின் யோக்கியதை எப்படிப்பட்டது, அதை மக்கள் எவ்வளவு தூரம் மதிக்கின்றார்கள் என்பதும் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பஹிஷ்காரம் என்கின்ற கூச்சல் நமது நாட்டில் ஏற்பட்ட அந்த நிமிஷம் முதலே இக்கூச்சல் வடநாட்டில் மகம்மதியர்களுக்கு விரோதமாக அவர்களுடைய வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ உரிமையைப் பிடுங்கிக்கொள்ளவும் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகவும் சிறப்பாக தீண்டப்படாதார் என்று கொடுமைப்படுத்தப் பட்டமக்களைத் தலையெடுக்க வொட்டாமல் செய்வதற்காகவும் செய்யப்பட்ட சூட்சிகள் என்று நாம் எழுதியும் பேசியும் வந்ததோடு

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

## சீன அரசாங்கமும் கடவுள்களும்.

சீன அரசாங்கத்தார் தங்கள் பிரஜைகள் கண்மூடித்தனமாக வணங்கி வந்த கடவுள்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அவைகளில் பலவற்றிற்கு பூஜைகள் செய்யக் கூடாதென்று தீர்மானித்ததோடு அழித்து விடும்படியாகவும் உத்திரவு போட்டு விட்டார்கள்.

அவைகளில் முக்கியமான கடவுள்கள் எதென்றால் சந்திரன், சூரியன், இடி, மின்னல், மழை, நக்ஷத்திரங்கள் கிராமங்களுக்கும் நகர்ப்புரங்களுக்கும் சொந்தமானதான கிராம தேவதைகள் மற்றும் அம்மை முதலிய தொத்து வியாதி வாராமல் தடுப்பதற்கென்று ஏராளமான பணத்தை வருஷா வருஷம் செலவு செய்து உற்சவங்கள் செய்து வரும் சில்லரை தேவதைகள் ஆகியவைகளின் விக்கிரகங்களும், அவைகளின் கோவில்களுமே யாகும். இவற்றில் அநேகத்தை அரசாங்கத்தார் தாங்களே ஆட்களை வைத்து விக்கிரகங்களை உடைத்தும் கோயில்களை இடித்தும் வருகின்றார்கள். இந்தக் காரியங்களை அரசாங்கத்தார் முதல் முதல் க்வாங்டங் என்னும் மாகாணத்தில் அமுலுக்குக் கொண்டுவந்து நிறைவேற்றி இருக்கின்றார்கள். இதனால் அந்த மாகாணத்தில் அந்த அந்த கோவில்களில் பூசை செய்து வந்த ஆயிரக்கணக்கான அர்ச்சகர்கள் ஜீவனத்திற்கு வேறு மார்க்கமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு திண்டாடிவருகின்றார்கள்.

அன்றியும் அவர்கள் பொது ஜனங்களிடம் "சர்க்கார் மத சுதந்தரத்தில் பிரவேசித்தது தப்பு" என்று சர்க்காரின் மீது விஷமப்பிரசாரம் செய்து கொண்டும் வருகின்றார்கள்.

## சுகாதார மந்திரியின் சுற்றுப்பிரயாணம்.

சென்னை சுகாதார இலாகா மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் 4—3—29ம் தேதி முசிரி தாலூகா போர்டு பிரசிடெண்ட் திருவாளர் R. M. A. R. இராமசாமிப்பிள்ளை அவர்களுடன் முசையூரில் குளம், ஏரி முதலியவைகளைப் பார்வையிட்டு விட்டு சென்றார். அப்பொழுது முசிரி தாலூகா போர்டார், துறையூர் ஆதிதிராவிடர், பார்ப்பனரல்லாதார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். 5-3-29 தேதி கனம் மந்திரியவர்கள் திருச்சி ஜில்லா கலெக்டர் யூ. ராமராவ், ஜில்லா போர்டு பிரசிடெண்ட் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களுடன் அரியலூருக்கு விஜயம் செய்தார்கள். உடையார்பாளையம் தாலூகா போர்டாரும், அரியலூர்போர்டு ஹைஸ்கூலாரும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர். அன்று கனம் மந்திரியவர்களின் உடையார் பாளையம் தாலூகா போர்டு பிரசிடெண்டு, திரு. எஸ் பாலகிருஷ்ணம் பிள்ளை விருந்தினராக இருந்து திருச்சி சென்றார்.

## சைமனுக்கு வரவேற்புகளும் யாதாஸ்துகளும்.

**தென்னிந்திய செங்குந்தர் சங்கத்தார்.**

உயர் திருவாளர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் தலைமையில் சைமன் கமிஷனுக்குத் தங்களது மனமுவந்த வரவேற்பைத் தெரிவித்துக்கொண்டதோடு ஒரு யாதாஸ்த்தை சமர்ப்பித்து இருக்கிறுன்றார்கள்.

**தென்னிந்தியமருத்துவகுல சங்கத்தார்.**

உயர்திருவாளர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் சைமன் கமிஷனுக்கு ஒருவரவேற்புப்பத்திரம் அளித்ததோடு தங்கள் சமூக சார்பாய் ஒரு யாதாஸ்த்தையும் சமர்ப்பித்து இருக்கின்றார்கள்.

**சென்னை மாகாண பார்க்கவகுல மகாஜன சங்கத்தார்.**

உயர்திருவாளர்கள் ராவ் சாயபு குழந்தைவேலு உடையார், துரைசாமி உடையார் முதலிய பிரமுகர்கள் மூலம் சைமன் கமிஷனுக்குத் தங்கள் சமூக வரவேற்பைத் தெரிவித்துக்கொண்டதோடு தங்கள் சமூக சார்பாய் ஒரு யாதாஸ்த்தையும் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

## சர். அண்ணாமலையாருக்கு பரம்பரை ராஜா பட்டம்.

செட்டிநாட்டுக்கோத்தான் சர் அண்ணாமலையாருக்கு அரசாங்கத்தார் இராஜ பட்டம் அளித்திருக்கிறார்கள். இப்பட்டமானது சர் அண்ணாமலையாரின் குடும்பப் பின்வார்சுகளும் பரம்பரையாக வழங்கிக்கொள்ளும் உரிமையுடன் அளிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் சர். அண்ணாமலையாரின் பின் வார்சின் முதல்வருக்கு இப்பட்டங்கள் தொடர்ந்துவரும்.

சர். அண்ணாமலையார் கல்விக்காக உதவிய 4000000 நாற்பது லக்ஷம் ரூபாய் தருமத்தை அரசாங்கமும் உலகமும் மதித்து அதற்காக தங்களது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டதற்கறிகுறியாகும்.

இராஜா சர் அண்ணாமலையார் பின் வார்சு இவ்வளவுடன் நின்றுவிடாமல் அதாவது, வெறும் ராஜாவோடு இருந்துவிடாமல் மஹாராஜா பதவி அடையத்தக்க பேருபகாரத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் செய்ய முன் வரவேண்டுமாய் விரும்புகின்றோம்.

ஈரோட்டிற்கு அடுத்த காவேரி

## ஆற்றுக்கு பாலம்.

கோயமுத்தூர் ஜில்லா போர்டார் அவர்கள் ஈரோட்டிற்கு 2 மைல் தூரத்திற்குள் ஓடும் காவேரி ஆற்றிற்கு ஒரு பாலம் கட்டுவதாக தீர்மானித்து பிளானும் திட்டமும் போடவேண்டிய வேலைகள் மிக துரிதமாகச் செய்து வருகிறார்கள். இது என்றும் போற்றக்கூடிய ஒரு அரிய காரியமாகும்.

## ஜெர்மெனியில் கல்யாணரத்துச் சட்டம்.

**நினைத்த போது கல்யாணத்தை ரத்து செய்து கொள்ள உரிமை.**

ஜெர்மெனியில் இதுவரை இருந்து வரும் கல்யாண ஒப்பந்தச் சட்டமானது புருஷன் பெண்ஜாதி ஆகியவர்களில் யாராவது ஒருவர் விலகிக்கொள்ள வேண்டுமானால் ஏதாவது ஒரு காரணம் காட்டி ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி கோர்ட்டுகளில் ருஜு செய்த பிறகு தான் கல்யாண ரத்து செய்துகொண்டு விலகிக்கொள்ள அனுமதி அளிக்கக்கூடியதாய் இருந்து வருகின்றது.

ஆனால் இனிமேல் புருஷன் பெண்ஜாதி இருவருமோ அல்லது இருவர்களில் யாராவது ஒருவரோ யாதொரு காரணமும் காட்டாமலும் ஒருவர் மீது ஒருவர் எவ்வித குற்றமும் சுமத்தி ருஜு செய்ய வேண்டிய அவசியமில்லாமலும் நினைத்த மாத்திரத்தில் தங்களுக்குள் யாருக்குஇஷ்டமில்லையானாலும் கல்யாண ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ள பூரண உரிமை இருக்கும்படியாக புதிய சட்டம் ஒன்று ஜெர்மன் அரசாங்க பார்லிமெண்ட் சபையில் ஆஜர் செய்யப்பட்டு சீக்கிரம் யோசனைக்குக் கொண்டுவரப்படப் போகின்றது.

இந்தப் புதிய கொள்கைக்கும் அங்கும் ஒரு சிறு எதிர்ப்பு இருக்கின்றதானாலும் அதுவும் கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த பழைய சம்பிரதாயக் காரரான ரோமன் கத்தோலிக்கர்கள் என்கின்ற வகுப்பார்களே முக்கியமாக எதிர்க்கின்றார்கள்.

அன்றியும், மத்தியகட்சியார் என்பவர்களிலும் தேசியக்கட்சியார் என்பவர்களிலும் வெகு சிலர் அவர்களுக்கு அனுகூலமாக இருக்கின்றார்கள். ஆனாலும் அநேகமாக பெரும்பாலோரால் இந்த சட்டம் நிறைவேற்றப்படப் போவதில் யாதொரு ஆக்ஷேபனையும் இல்லை.

நியாய விரோதமாய்ப் பிறந்த குழந்தைகள் என்பவர்களுக்கு உள்ள தாழ்மையும் சுதந்திரக்குறைவையும் நீக்கத்தக்க விதிகளையும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. "ஜஸ்டிஸ்"

## குறிப்பு.

சென்ற வாரம் வெளிவந்த 'குடி அரசில்' 13வது பக்கத்தில் 'இஸ்லாமும் சுயமரியாதை இயக்கமும்' என்னும் மகுடத்துடன் பிரசுரிக்கப்பட்ட வியாசம் 'தாருல் இஸ்லாம்' பத்திரிகையிலிருந்து எடுத்துப் போடப்பட்டது.

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.
காப்பிப்பொடியை ஒழிக்கும்

## ஹேப்பி பவுடர்.

உஷ்ணத்தை மாற்றும்! உலகஇன்பத்தை ஊட்டும்! கற்பமூலிகைகளால் தயாரித்தது! காப்பிபோன்ற மணமுடையது! வி.பி வேறு
¼ டஜன் டின் ரூ. 1. ½ டஜன் ரூ. 1¾.
S. V. ராஜப்பா, மளிகை, பழனி.



அன்னைத் துயிர் நின்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஞு மாசி-மீ 27-உ.

# தேர்தல் தந்திரம்.

## அன்னிய ஆடை பகிஷ்காரப் புரட்டு.

சூழ்ச்சிகளிலும் வஞ்சகத்திலும் சிறந்த ஒரு கூட்டத்தார் சமுதாய வாழ்க்கையில் தங்களது சுயநலத்திற்கு என்று எப்படி மதம் சமயம் வேதம் சாஸ்திரம் கோவில் பல சாமிகள் அவைகளுக்கு புராணங்கள் குளங்கள் தீர்த்தங்கள் சடங்குகள் பூசைகள் உற்சவங்கள் பிராயச்சித்தங்கள் மோக்ஷம் நரகம் மேல்ஜாதி கீழ்ஜாதி முதலியவைகளைக் கற்பித்து தங்களையும் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொண்டு இவைகளுக்கு சுயத்திற்குத் தகுந்தபடி வியாக்கியானம் (அர்த்தம்) சொல்லி பாமர மக்களை ஏமாற்றி அவர்களைப்படிக்க விடாமலும் செய்ததோடு மற்றவர்கள் உழைப்பில் தாங்கள் நோகாமல் பிழைக்கவும் வழி செய்துகொண்டது போலவே நமது நாட்டில் படித்தவர்கள் என்கின்ற ஒரு கூட்டத்தார் சிறிது காலமாய் அதாவது 40, 50 வருஷகாலமாய் தங்கள் சுயநலத்திற்கு என்று தூரிய தேசீய காங்கிரஸ், சுயராஜ்யம், தேசியம் என்பதாகப் பல பெயர்களை உற்பத்தி செய்து அதன் மூலமாகவும் அரசாங்கத்தில் உத்தியோகங்களும் அதிகாரங்களும் பெற எண்ணங்கொண்டு பாமர மக்களைக்கூட்டி ஏமாற்றி பல தீர்மானங்கள் செய்து ஒன்றுக்கு இரண்டு மூன்று நான்கு சில சமயங்களில் பத்து என்பதாக உத்தியோகங்களையும் இலாகாக்களையும் உற்பத்தி செய்து சம்பளங்களையும் அது போலவே வருஷா வருஷம் கோடிக்கணக்காய் உயர்ப்பித்துக் கொண்டு அவைகளுக்காக பொது ஜனங்கள் மீது வரியையும் தாறுமாறாய் உயர்த்தி நாட்டையும் ஜன சமூகத்தையும் பாழ்படுத்திவரும் விஷயத்தை இதற்கு முன் பல தடவைகளில் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம். இதற்கு உதாரணங்களைச் சுருக்கிக்காட்ட வேண்டுமானால் நம்நாடு காங்கிரசுக்குமுன் இருந்த நிலைமையும் அதற்கு பின் ஏற்பட்ட நிலைமையும் ஒன்று இரண்டு விஷயங்களில் பார்த்தாலே விளங்காமல் போகாது. நமது மாகாண அரசியல் நிர்வாகத்தில் காங்கிரசுக்கு முன் மீ 5500 ரூபாயில 2 மந்திரிகள் 2000 ரூபாயில் 2 காரியதரிசிகள் இருந்தது காங்கிரசுக்குப்பின் 5550 ரூபாயில் 7 மந்திரிகள் 2500 ரூபாயில் 5 காரியதரிசிகள் ஏற்பட்டதும் நீதி நிர்வாகத்தில் காங்கிரசுக்கு முன் மீ 2500 ரூபாயில் 5 ஹைகோர்ட் ஜட்ஜிகள் இருந்தது காங்கிரசுக்குப்பின் மீ 3000 ரூ சம்பளத்தில் 15 ஜட்ஜிகள் இருப்பதும் காங்கிரசுக்கு முன் இந்தியாபூராவுக்கும் 30 கோடி ரூ. வரி வசூலிக்கப்பட்டு வந்தது இப்போது 150 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டதும் ஆகியவைகளை கவனித்தால் போதுமானதாகும். இன்னமும் இது போன்ற விஷயங்கள் எத்தனை வேண்டுமானாலும் எடுத்துக்காட்டலாம்.

இந்த நிலையில் பாமர மக்கள் வஞ்சிக்கப்பட்டு வதைக்கப்பட்டதோடு நில்லாமல் இந்த அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் நமது நாட்டில் ஒரு கூட்டத்தாரே அதாவது பார்ப்பனர்களே அடையவேண்டும் என்பதற்காகக் கருதி அதற்காகவும் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டும் வருகின்றது. அந்த சூழ்ச்சிகளின் பலனைத்தான் நமது மாகாணத்தில் சமீபகாலம் வரையில் சட்டசபை ஜில்லா போர்ட் தாலுக்கா போர்ட் முனிசிபாலிட்டி முதலிய பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் பார்ப்பனரல்லாத ஓட்டர் என்பவர்களே 100க்கு 75 பேர்களுக்கு மேலாக இருந்தும் பார்ப்பனர்களே தெரிந்தெடுக்கப்பட்டு அங்கத்தினர்களாகவும் தலைவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றார்கள். அதுபோலவே பொது ஜன எண்ணிக்கையில் பார்ப்பனர்கள் 100க்கு மூன்று பேர் வீதமே இருந்து வந்தும் அதிகாரபதவிகளிலும் பெருந்த அதாவது 100, 200, 500, 1000, 2000 3000, 5000, ரூ சம்பளமுள்ள உத்தியோகங்களில் 100 க்கு 90 வீதமும் 95 வீதமும் சிலவற்றில் 100 க்கு 100 வீதமும் இருந்து வந்தார்கள். சிலவற்றில இன்னமும் இருந்து வருகின்றார்கள். இவைகளை உணர்ந்த சிலர் இக்கொடுமைகளை ஒழிக்க முயற்சித்ததில் அவர்களை இப்பார்ப்பனர்கள் தேசத்துரோகன் என்று சொல்ல ஆரம்பித்து விட்டதால் கடைசியாக இந்தப் பதவிகளையும் உத்தியோகங்களையும், சம்பளங்களையும் அப்பார்ப்பனர்களே ஏக போகமாய் அனுபவித்து வருவதையாவது ஒழித்து எல்லா மக்களுக்கும் அதில் பங்கு கிடைக்கட்டும் என்று முயற்சி செய்து தீர வேண்டியதாயிற்று. இம்முயற்சியின் பலனாய் பார்ப்பனரல்லாதார் ஒருவாறு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலனடைந்து வருவதன் மூலம் பார்ப்பனர்களின் ஏகபோக ஆதிக்கமும் உரிமையும் ஆட்டம் கொடுக்கவேண்டியதாய்ப்போய் விட்டதால் அதற்காக பார்ப்பனர்கள் வேறு பல சூழ்ச்சிகளும் கண்டு பிடிக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். அந்தச் சூழ்ச்சிகள் தான் தேர்தல்கள் சமீபிக்கின்ற காலங்களில் சுயராஜ்யக்கட்சி, முட்டுக்கட்டைக்கட்சி பூரண சுயேச்சைக்கட்சி என்பது போன்ற 'தீவிரவாதிகள்' கட்சிகளும் அவைகளுக்குள் தீண்டாமை விலக்கு உத்தியோக விலக்கு பட்டம் விலக்கு சைமன் கமிஷன் விலக்கு அரசாங்க விருந்து விலக்கு அன்னிய துணி விலக்கு என்பது போன்ற பல விலக்குத் திட்டங்களையும் வார்த்தை அளவில் கற்பித்துக் கொண்டு அவைகளுக்காக அறிவுக்கும் அனுபவத்திற்கும் நாணயத்திற்கும், பொருந்தாத முறைகளில் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் யோக்கியர்களும் அறிவாளிகளும் நாணயமும் சுயமரியாதையும் உள்ளவர்கள் பின் பற்ற முடியாத ஒப்புக்கொள்ளாத ஒத்துழைக்க முடியாத முறைகளில் அவைகளை பிரசாரம் செய்வதின் மூலம் பாமர மக்களின் செல்வாக்கையும் ஓட்டுகளையும் பெற முயற்சித்து வருகின்றார்கள். இந்த சூழ்ச்சிகள் சாதாரணமாக ஒவ்வொரு தேர்தல்களிலும் கையாளப்பட்டு வருவதையும் பார்க்கலாம். உதாரணமாக அதிக தூரம் கூடப் போக வேண்டியதில்லை. தீண்டாமை விலக்கு என்பது காங்கிரஸ் திட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானமாக இருந்தும் அது காரியத்தில் வருவதானால் பார்ப்பனர்கள் உயர்வு அடியோடு போய் விடும் எனக்கருதி அதைப்பற்றி எல்லா காங்கிரஸ் திட்டத்திலும் நழுவவிட்டுக்கொண்டே வந்து விட்டார்கள். சென்னை காங்கிரசிலும் அக்கொள்கையை காங்கிரஸ் கொள்கையில் ஒன்றாக இருக்கும்படி சேர்க்கவேண்டும் என்று திரு ஆர். கே. ஷண்முகம்செட்டியார் தீர்மானம் அனுப்பி இருந்தும் அதை யோசனைக்குக்கூட எடுக்காமலே சூழ்ச்சி செய்து அடக்கிவிட்டார்கள்.

தவிர சென்ற சட்டசபைத் தேர்தலுக்கு முந்தின சட்டசபைத் தேர்தலின்போது சுயராஜ்யக்கட்சி என்று ஒன்றை கற்பித்து அரசாங்கம் நடைபெற ஒட்டாமல் முட்டுக்கட்டை போடுவது என்ற கொள்கையை சொல்லிக்கொண்டு தேர்தல் வேட்டை ஆடினார்கள்.

இதைக்கண்டு பல பாமரமக்களும் ஏமாந்தார்கள், தேர்தல் நடந்த பின்பு வெற்றிபெற்ற சுயராஜ்யக்கட்சியாரும் முட்டுக்கட்டையாரும் அரசாங்க சட்டசபைகளில் கலந்து கொண்டு தீர்மானங்களைப் பிரேரேபிக்கவும் எதிர்க்கவும் கிடைத்த உத்தியோகங்களையும் பதவிகளையும் வருமானங்களையும் நாணயக் குறைவான முறையில் பெறவும் செய்ததின் மூலம் அரசாங்கத்தை ஒருவாறு நடத்திக் கொடுத்தார்கள்.

அதுமாத்திரமல்லாமல் இரண்டு வருஷகாலம் சட்டசபையில் இருந்து சகல போகமும் அனுபவித்துவிட்டு அந்தச் சட்டசபை காலாவதி ஆகும் தருணத்தில் கொஞ்சமும் மானம் ஈனம் நாணயம் ஆகியவைகள் ஒரு சிறிதும் இல்லாமல் "இந்த சட்டசபைக்கு வந்ததே தப்பு இதில் ஒரு காரியமும் செய்யமுடியவில்லை. இந்த சர்க்கார் எங்களை ஒரு மனிதர்கள் என்றுகூட ஒரு சிறிதும் மதிக்கவே இல்லை. ஆகையால் இதில் இனி அரைவினாடி நேரம்கூட இருப்பது எங்களுடைய சுயமரியாதைக்கு இழிவு ஆதலால் நாங்கள் இந்த சட்டசபையை விட்டு வெளியில் போகின்றோம்" என்று சொல்லிவிட்டு வெளிவந்துவிட்டு மறுபடியும்

அந்த சர்க்கார் இவர்களை மதிக்காமலும் லக்ஷியம் செய்யாமலும் கூப்பிடாமலும் இருக்கும்போதே அந்தச் சட்டசபைக்குள் போய் சிறிதுகூட மான வெட்கமில்லாமல் தீர்மானங்களைப் பிரேரேபிப்பதும் எதிர்ப்பதும் ஆன காரியங்கள் செய்துவிட்டு மறுபடியும் அடுத்தசட்டசபைத் தேர்தலுக்கும் நின்றார்கள்.

அப்படி நிற்கும்போது முன்போல் முட்டுக்கட்டை போடுவது என்கின்ற வார்த்தையை அடியோடு விட்டுவிட்டு புதிதாக ஒரு சூட்சி செய்தார்கள். அதாவது:— தாங்கள் மந்திரி பதவி உத்தியோகம் முதலியவைகள் பெற்றுக்கொள்வதில்லை என்றும் மந்திரி பதவிகள் வேறு யார் பெற்றுக்கொண்டாலும் அந்த மந்திரி சபைகளை அழித்துவிடுவதாகவும் சொல்லி பிரசாரம் செய்து ஓட்டுப் பெற்று மறுபடியும் சட்டசபைக்கு போனார்கள். அந்தப்படி போனபின்பு மந்திரி பதவி பெறுவதில் தங்களுக்குள் போட்டி இருந்தபடியால் வேறு ஆசாமிகளைப் பிடித்து மந்திரிகளாக இருக்கச்செய்து அவர்களுக்கு உதவியுஞ்செய்து சட்டசபைத் தலைவர்பதவியும் தங்கள் கட்சித்தலைவர் ஒப்புக்கொண்டு அரசாங்கத்தை நன்றாய் நடத்திக்கொடுத்தார்கள். இதற்கு காங்கிரஸ் என்கின்ற ஒரு ஒழுக்கங்கெட்ட இயக்கமானது சற்றும் நாணயமும் யோக்கியப் பொறுப்பும் இல்லாமல் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைக்கவும் மந்திரி சபையை நடத்திக்கொடுக்கவும் உதவி செய்ததற்காக அதைப் பாராட்டுவதாக ஒரு தீர்மானமும் செய்துவிட்டது. இது இப்படியிருக்க ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றும் நாணயங்கெட்ட கூட்டமாகிய திரு காந்தி கூட்டமும் இந்த நாணயமும் யோக்கியதையும் அற்ற கட்சியின் வெற்றிக்கு மதுவிலக்கின் பேரால் திருட்டுத்தனமாகவும் வெளிப்படையாகவும் உதவி செய்ததோடு "வேதவாக்கு" என்று சொல்லக் கூடிய "யங் இந்தியா" பத்திரிகையும் காந்தி சிஷ்யர் என்கின்ற திரு. ராஜகோபாலாச்சாரியாரும் கோடுகட்டிய குறள்களும் கிராமப் பிரசாரமும் செய்து இக்கூட்டத்திற்கு ஓட்டுகளும் வாங்கிக் கொடுத்தார்கள். கடைசியாக இவைகளின் பலன் என்னவென்றுபார்த்தால் சட்டசபையின் மூலம் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு தடை செய்யலாமோ அதைத்தவிர வேறு ஒரு காரியமும் செய்ததாக அவர்களே சொல்லிக்கொள்ள முடியாமல் போய்விட்டது. போதாக்குறைக்கு இந்த வருஷத் தேர்தலுக்கும் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டாய்விட்டது.

அவைகளில் முதலாவது சைமன் கமிஷன் பகிஷ்காரம். இது அழுவாரற்ற பிணமாய் நாற்ற மெடுத்து புழுத்து சருகாய்க் காய்ந்து விட்டது.

இரண்டாவது பூரண சுயேச்சை க்கட்சி என்பது. இதன் யோக்கியதை இப்பொழுதே வெளியில் எடுத்துப் பேசுவதற்கு இடமில்லாமல் போனதோடு கூடிய சீக்கிரத்தில் இக்கட்சியில் சேர்ந்து பயந்து கொண்டு ஓடிப்போய்விட்ட இரண்டொருவரைத் தவிர மற்றும் மீதி உள்ள இரண்டொருவர்களும் பயித்தியகார ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டு விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

போக மூன்றாவதாக ஸ்லேத்துமம் கட்டி சாகப்போகும் மனிதனுக்கு 'துளசித் தீர்த்தமாக' விளங்குவதுபோல் 'அன்னிய ஆடை பகிஷ்காரம்' என்கின்ற ஒரு பித்தலாட்டப் பிரசாரமே யாகும் இந்த பித்தலாட்ட மூட்டையை தூக்கி திரு. காந்தியின் தலையில் வைத்து அவருக்கு கொஞ்சநஞ்சம் இருந்த மரியாதையையும் ஒழிக்க முடிவு செய்துகொண்டு வெளியில் புறப்பட்டாய் விட்டது. இதன் பேரால் திரு. காந்தி கைதி செய்யப்பட்டு சொந்தப்பொறுப்பில் வெளி வந்தும் ஆய்விட்டது. இதை இனி பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் பத்திரிகையில் கலம் கலமாய் எழுதுவதின் மூலமும் கிராமங்களில் போய் கத்துவதின் மூலமாகவும் பார்ப்பனர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க பிரசாரங்கள் செய்து பார்ப்பனர்களிடம் இருந்து கூலி வாங்கப் போகின்றார்கள் என்பது நிச்சயம். ஆனால் இவர்கள் பேச்சைக்கேட்டு ஏமாறுவதற்கு இனி எந்த கிராமத்திலும் முன்போல் முட்டாள்கள் இல்லை என்பதும் நிச்சயம்.

ஏனெனில் இப்போது நமது நாட்டில் தீண்டாமை விலக்கைவிட மது விலக்கைவிட அன்னிய துணி விலக்குக்கு என்ன அவசியமும் அவசரமும் நியாயமும் இருக்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தியாவில் எவ்வளவோ மில்லுகள் இருந்தும் இந்தியாவுக்கு வருஷா வருஷம் வெளிநாட்டிலிருந்து வரும் துணியின் கிரயம் ரூ600000000- அறுபது கோடியே யாகும். இந்த அறுபது கோடி ரூபாய்க்கு ஈடு செய்வதற்கு இந்தியாவில் உற்பத்தியாகும் கதர் வருஷம் ஒன்றுக்கு 5 முதல் 10லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள கதர் துணியே யாகும். இதுவும் வெளிநாட்டு துணிகளும் மில்துணிகளும் கஜம் ஒன்றுக்கு 4 அணா முதல் ஆறு அணா வரையில் விலையானால் கதர் துணிகள் 10 அணா முதல் கொண்டு 12 அணா வரையில் விலை ஏறக்கூடியதாயிருக்கின்றது. இவற்றில் பெண்களுக்கு என்று கதர் 50000 ரூ. பெறுமானமுள்ள துணிகள்கூட உற்பத்தியாவதில்லை. ஆனாலும் அன்னிய துணியொருசேலை இரண்டரை ரூபாய் அல்லது மூன்று ரூபாய் அடங்கினால் கதரில் அதைப்போல் ஒரு சேலை 8 ரூபாய் அல்லது 10 ரூபாய் அடக்கமில்லாமல் கிடைப்பதில்லை.

ஆகவே இன்றையதினம் நமது நாட்டில் உள்ள அன்னிய துணிகளை எல்லாம் நெருப்பில் கொளுத்திவிட்டால் சுமார் 5992 லக்ஷ ரூபாய் துணிகள் கட்டும்படியான ஆண்களும் பெண்களும் என்னகதி அடைவார்கள்? ஒருசமயம எல்லோரும் திரு. காந்தியைப் போல் முழங்காலுக்குமேல் துணிகட்டிக்கொள்வதன் மூலம் சுமார் 10, 20, கோடி ரூ பெறுமான துணி வேண்டியதில்லாமல் போய்விட்டாலும் அதற்குப்பதிலாக திரு காந்தி உபயோகிப்பதுபோல் மெத்தைதலையணிதுப்பட்டி கொசுவலை ஆகியவைகளையும் பார்த்து ஜனங்கள் அதையும் பின்பற்றுவதனால் மேல்கண்ட 10,20கோடி ரூபாய் துணி மீதியாவதற்குபதிலாக 20.30 கோடி ரூபாய் துணி அதிகமாகத்தான வேண்டியிருக்கும். தவிர ஏழைகளுடைய துணிகளைவாங்கிக்கொளுத்தினால் அவர்கள் அதற்குப் பதிலாக வேறு எதைவாங்க யோக்கியதைஉடையவர்கள் ஆவார்கள் என்பதை யாராவது யோசித்துப் பார்த்தார்களா? கதர் வாங்குவதானால் பணம் ஒன்றுக்கு இரண்டுமூன்று அதிகமாய்ச்செலவுசெய்ய வேண்டும் அப்படிச்செலவு செய்வதானாலும் கிடைக்குமா? கடைசியாக உள்நாட்டு மில்துணியானாலும் வாங்குவதாயிருந்தாலும் அதுவும் போதாமல் தானே மேல்கொண்டு அறுபது கோடி ரூபாய் துணி வெளி நாட்டிலிருந்து வர வேண்டியிருக்கின்றது.

அப்படி இருக்க இந்த கணக்கை எப்படி சரிசொல்ல முடியும்? எல்லோருமே நூல்நூற்க ஆரம்பித்தால் ஒருசமயம் துணிகிடைக்கக்கூடும் என்று சொல்லலாமானாலும் நூற்பவர்களுக்கெல்லாம மணிக்கு ஒரு (சல்லி) பைதானே கூலி கிடைக்கின்றது அந்தப்படி மணிக்கு ஒருதம்பிடி கூலி கிடைப்பதானாலும் அந்த நூலில் நெய்த வேஷ்டிக்கு ஒன்று இரண்டரை மூன்று கிரையம்கொடுத்து வாங்கினால் தானே கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது இதுவரை கதருக்காக என்று பாழாக்கின ரூபாய்களை நூல் நூற்பு மில்லாகவும் நெசவுசெய்யு மில்லாகவும் கட்டி இருந்தால் சுமார் ஒரு 50மில்கட்டியிருக்கலாம். இந்த ஐம்பது மில்லில் உற்பத்தியாகும் நூலுக்கும் துணிக்கு கொடுக்கக்கூடிய கூலிகளில் இப்போது மணிக்கு ஒருதம்பிடி சம்பாதிக்கும்கூலி ஆண்களைவிட இரண்டுமூன்று பங்கு ஆட்கள் மணிக்கு ஒரு அணா முதல் ஒரு ரூபாய்வரை சம்பாதிக்கக்கூடிய யோக்கியதை அடைவார்கள்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு மக்களை ஏமாற்றுவதற்கென்றே-ஒரு கூட்டத்தாரின் வயிற்று வளர்ப்புக்கென்றே-தேர்தல் சூழ்ச்சிக்கென்றே போலி இயக்கங்களை வைத்துக்கொண்டு மக்களின பணத்தையும் நேரங்களையும் ஊக்கங்களையும் அறிவுகளையும் கெடுத்துக்கொண்டும் இருக்கும்படி இனியும் எந்த காலத்திற்கு நாம் இடங்கொடுத்துக் கொண்டு இருப்பது என்பதை யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.

---

## நாவலூற்றுச் சமரச சன்மார்க்க சங்கம்.

நிகழும் விபவ ஆண்டு மாசித்திங்கள் ௨௬ 10—3—29—ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு (அரங்கமங்கலம் அடுத்த) குரும்பப்பட்டியில் நிரந்தர அவைத்தலைவர் உயர்திரு சி. சுவாமிசிவநேசன் அவர்கள் தலைமையின்கீழ், எவ்வுயிர்க்கும் "அனபாயிரு" "கல்வியும் பகுத்தறிவும்" "காலமும் சீலமும்" என்னுஞ் செம்பொருள்கள் பற்றி முறையே உபன்யாசங்கள் நடைபெறும்.

நாவலூற்று
4—3—29

இங்ஙன்
சங்கத்தார்

## லாலுகுடி பனகால் அரசர் வாசகசாலைத்திறப்பு விழா.

நாளது 10—3—29 ஞாயிற்றுக்கிழமை காலை லாலுகுடி துரௌபதி அம்மன் சந்நிதி முன்பாக உள்ள மாளிகையில், நமது ஜில்லா போர்டு தலைவர், திருவாளர், டி. எம். நாராயணசாமிப்பிள்ளை, எம். ஏ. பி. எல், எம். எல். சி. அவர்கள் தலைமையில், நமது மாபெருந்தலைவர், வைக்கம் வீரரும், 'குடி அரசு', 'ரிவோல்ட்' ஆசிரியருமான திருவாளர் ஈ. வெ. ராமசாமியார் அவர்கள் "பனகால் அரசர் வாசகசாலை"யைத் திறந்து வைப்பார்கள்.

அன்று மாலை 5 மணிக்கு பெரிய கோவில் முன்பாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியார், எஸ். குருசாமி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், நா. சு. மு. செல்வக்கணபதியார் ஆகிய பெரியோர்கள் 'நமது இயக்கம்' என்பது பொருள்பற்றி பேசுவார்கள்.

## இன்னுமா கிணறு வித்தியாசம்.

திருமங்கலம் தாலூகா சந்தையூர் ஜமீனைச் சேர்ந்த அம்மாபட்டி, ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு வடக்கே 10 வது மைலில் மதுரை ரோடுக்கு கிழ்பக்கம் ஒரு பர்லாங் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் நாயுடு வகுப்பார் வீடு 40 ம் நாடார்கள் வீடு பத்தும் இருக்கின்றன. ஷை யூரிலுள்ள ஒரு குடி தண்ணீர் கிணற்றில் மேல்படி இருவகுப்பார்களும் பரம்பரையாக இது வரை தண்ணீர் எடுத்து வந்திருக்க இப்போது மேற்படி நாடார்களை இம்சை செய்து பயங்காட்டி வேறு கிணறு தோண்டிக் கொடுக்கிறதாகவும் இனிமேல் தோண்டிக்கொடுக்கப் போகிற கிணற்றில் நாடார்கள் தண்ணீர் எடுத்துக் கொள்ளுகிறதென்றும் கிணறுதோண்டுகிற வரையும் பழய கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொள்ளுகிறதென்றும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது என்ன மதி மோசம். தற்சமயம் உலகெங்கும் சுயமரியாதைச் சூரியன் உதயமாகி ஜாதி வித்தியாசமென்ற மூடமதியை எரித்துக் கொண்டு வரும் போது இவ்வூரார்கள் மாத்திரம் அந்தகாரத்தில் மூழ்கியிருப்பதேனோ இதைக்கண்ணுறும் சுயமரியாதை வீரர்கள் கவனிப்பார்களாக.

பழனிச்சாமி.

## மூன்றுபேர் கட்சியினால் மாண்டார்கள்

மதுரை ஜில்லா உத்தமபாளையம் தாலூகா கோம்பை யூனியன் தலைவர் தி. ர. திருமலைசாமி செட்டியார் 24—12—28-உயிலும், ஷையூர் கர்ணம் சங்கரநாராயண முதலியாரும், முத்துக்குமாரசாமி முதலியாரும் 7—1—29ல் கொல்லப்பட்டார். இது சம்மந்தமாக ஒரு ரெங்கய்யன் செட்டி சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறு. மற்ற எதிரிகளைப் போலீசார் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

## மதுவிலக்கு பிரசாரத்திற்கு 400000 ரூ.

நமது மகாணத்தில் உள்ள சுமார் 4 கோடி பார்ப்பனரல்லாத மக்களும் ஏறக்குறைய ஏகமனதாய் இருந்து பல நாட்களாகக் கிளர்ச்சி செய்து வந்த வகுப்புவாரிப்பிரதி நிதித்துவக் கொள்கையை சென்னை அரசாங்க உத்தியோகத்தில் ஒருவாறு அமுலுக்கு கொண்டு வர முயற்சித்துத் தைரியமாய் வாதாடி வெற்றி பெற்ற நமது சுகாதார மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் மதுபானத்தில் பெரிதும் கஷ்டமும் நஷ்டமும் அடையும் பார்ப்பனரல்லாத ஏழை மக்களின் நன்மையை உத்தேசித்து மது விலக்குப்பிரசாரம் செய்வதற்கு என்று இவ்வருஷத்திய வரவு செலவுத்திட்டத்தில் நான்கு லட்சம் (400000) ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதைக்கண்ட நமது எதிரிகளான கன்மனப்பார்ப்பனர்கள் மதுபானம் நின்று விட்டால் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்து விடுமே எனக் கருதி சட்ட சபையில் அத்தீர்மானம் நிறைவேறாமல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள், ஆதலால் பார்ப்பனரல்லாத சட்டசபை அங்கத்தினர்களான கனவான்கள் இப்பார்ப்பனர்களின் சூட்சிக்கும் விஷமத்திற்கும் பயந்து ஏமாந்து போகாமல் தைரியமாய் உறுதியாய் நின்று பிரசாரத்தொகையை அனுமதித்து நிறைவேற்றி வைப்பதுடன் மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்களும் நம் மதுபானத்தினால் கஷ்டப்படும் மக்கள் சார்பாக நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

## ஸ்ரீ காந்தி கைதியாக்கப்பட்டார்.

கல்கத்தா சர்க்காரால் போடப்பட்ட ஒரு உத்திரவை மீறினதற்காக ஸ்ரீ. காந்தியவர்கள் அரஸ்ட் செய்யப்பட்டு சொந்த ஜாமீனின் மீது விடுதலை செய்யப்பட்டார். 26-ந் தேதி விசாரணை வாய்தா போடப்பட்டிருக்கின்றது.


## அதிர்ஷ்டம் பெறச்சமயம்.

கொஞ்சம் புத்தகமே மீதியிருக்கின்றன.

அருப்புக்கோட்டை

சாலியர் மகாஜனசங்கம் க்ஷேமநிதிலாட்டரி

## முதல் பிரைஸ் ரூ 1000

2 வது பிரைஸ் ரூ 500-3 வது பிரைஸ் 250.

மற்றும்பல சில்லரை பிரைஸ்களும் உண்டு.

தரும்தகமிஷன் தக்சலாபம்

22 சீட்டுகள் உள்ள புக் 1 க்கு 1 தனிப்பிரைஸ் உண்டு. சுக்கில வருஷம் வைகாசி மாதம் 24 தேதி (6—6—29)க்கு கண்டிப்பாய் பிரைஸ் எடுக்கக்கூடும்.

சீட்டு 1 க்கு ரூ 1 வீதம் 11000 சீட்டுகள் தேவைக்கு எழுதவும்

உ. அ. சுந்தரமகாலிங்கம்,
கே. பி கே. சுப்பிரமணியம்,
காரிய தரிசிகள்,
சாலியர் மகாஜனசங்கம் க்ஷேமநிதி,
லாட்டரிக்கமிட்டி,
அருப்புக்கோட்டை;
ராமனாதபுரம் ஜில்லா.


## நன்கொடை

மதுரை வி. கே. அண்டு சன்ஸ் சொந்தக்காரர் வி. கருப்பையா அவர்கள் மாமியாரும் கா. முருகன் அவர்கள் தாயாருமாகிய ஐயம்மாள் மரணசடங்கு சென்ற (மாசி) 20 தேதி பார்ப்பனரை நீக்கி நடைபெற்றது.

இதைமுன்னிட்டு 'குடிஅரசு'க்கு ரூ 1 நன்கொடையளித்தனர். வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம்.


## தேவை! தேவை!! தேவை!!!

## விதவைப்பெண் தேவை.

நல்ல திடகாத்திரமும் சாதாரணக் கல்வியும், சுயமரியாதைக் கொள்கையும், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 வருமானம் வர்த்தகத்தில் வரப்பெறுவோரும் இன்றுவரை மணமுடிக்கப்பெறாதவருமாகிய 30 வயது நாடார்குல வாலிபரொருவருக்கு, நாடார்குலத்திலுதித்த 20 வயதுக்கு மேற்படாததும் நல்ல அழகும் சாதாரணக் கல்வியேனுங் கற்ற விதவைப்பெண் தேவை.

விரும்புவோர் நம் சுயமரியாதை கொள்கைக்கேற்ப எக்குலப் பெண்ணாக இருப்பினும் மணமுடிக்கத் தயாரென்றாலும் நாடார் வகுப்பில் மறுமணம் என்றால் மருள மருள விழிக்கின்றார்களாதலால் அவ் வகுப்பின் அசட்டுக்கொள்கையை அகற்றவே நாடார் வகுப்புப்பெண்ணை விரும்பப்படுகிறது.

R. K. P.,
C/o
'குடி அரசு' ஈரோடு.

(7ம் பக்கத்தொடர்ச்சி.)

பூ-தே-தங்களிடமுள்ள சில பாணங்களை கேட்க வந்திருக்கின்றோம்.

ம-வி-என்ன பாணம்?

பூ-தே-124 எ. 153 எ. ஆகிய பாணங்கள் வேண்டும்.

ம-வி-ஏன் 144 பாணம் வேண்டாமா?

பூ-தே-144 அவனிடம் செல்லாது. அது சாமாரியாய் அவன் மேல் விடப்பட்டும் அலைகள் அவனிடம் போய் போய் அவன் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டு வந்து விட்டதோடு மாத்திரமல்லாமல் திரும்பிவந்து எய்தவர்கள் மீதுங்கூட சில சமயங்களில் பாய்ந்து விடுகின்றது.

ம-வி-சரி நாம் நமது தூதர்களை முதலில் உங்கள் லோகத்திற்கு அனுப்புகிறோம். அவர்களைக்கொண்டு பூலோக நிலை அறிந்த பிறகு வேண்டியது போல் செய்வோம்.

பூ-தே-பிரபுவே தங்கள்! தூதர்கள் யார் தயவு செய்து அதைக் கொஞ்சம் தெரிவித்து விட்டால் நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க அனுகூலமாயிருக்கும்.

ம-வி-நமது தூதர்கள் சைமன் கமிஷனர்கள். அவர்களிடம் முறைகளை மெய்ப்பியுங்கள்.

பூ-தே-நாங்கள் அறியாத புத்தியினால் தங்கள் தூதர்களை ஆதியில் அலக்ஷியமாய் கருதி விட்டோம். அதனால் வந்தவினைப்பகுதி என்று கூட சொல்லலாம். ஆனாலும் இப்போது அவர்களிடம் சொல்லிக் கொள்ளுவது எங்களுக்கு கொஞ்சம் அவமானமாயிருக்கின்றதே.

ம-வி-நேரில் தெரிவிக்கா விட்டால் பாதகமில்லை மறை முகமாக வேறு எதாவது வழிகளில் தெரிவித்து விடுங்கள்.

அப்படியே ஆகட்டும் பிரபுவே எப்படியாவது இந்தச்சமயம் எங்களைக் காப்பாற்றுங்கள். இல்லாவிட்டால் தங்களுக்கும் எங்களுக்கும் இரண்டு பேருக்குமே ஆபத்தாவந்துவிடும் இதை நன்றாய்மனதில் வையுங்கள்.

ம-வி-நம்மைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள் உங்கள் காரியத்தை நீங்கள் ஜாக்கிரதையாய்ப்பார்த்துக் கொள்ளுங்கள்

சரி போய் வாருங்கள்.

---

8ம் பக்கத்தொடர்ச்சி.

மகமதியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் கண்டிப்பாய்த்தங்கள் நிலைமையையும் தேவைகளையும் அவசியம் கமிஷன் முன் சொல்லியே ஆகவேண்டுமென்றுவற்புறுத்தியும்வந்தோம். அந்தப்படியே விஷயங்கள் நடந்ததோடு முக்கியமாய்த் தீண்டப்படாதவர்கள் என்னப்பட்டவர்கள் இமயம் முதல் குமரி வரையில் ஒரே மாதிரியாகத்தங்கள் நிலைமைகளையும் தேவைகளையும் எடுத்துச் சொல்லியிருப்பது குறித்தும் அவற்றை கமிஷனவான்கள் நன்றாய்உணர்ந்து வேண்டியது செய்வதாய் வாக்குறுதி கொடுத்திருப்பதைக் குறித்தும் நாம் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்

இந்தக்கமிஷன் அறிக்கையின் மீது வழங்கப்படும் சீர்திருத்தம் என்பது எத்தன்மையதுவாக இருப்பினும் நமக்கு அதைப்பற்றிசிறிதும் கவலை இல்லை. ஏனெனில் அச்சீர்திருத்தம் என்பதில் இப்போது தெரிவிக்கப்பட்ட குறைகள் நீங்கும்படியான மார்க்கங்கள் இல்லாதிருக்குமானால் இந்தச்சர்க்காரின் கண்களில்கோலைவிட்டுஆட்டக்கூடியநிலைமையைச் சாதாரணமாக வெகு சுலபத்தில்உண்டுபண்ணிக்கொள்ளக்கூடிய சௌகரியங்கள் தாராளமாகக் கிடைத்துவிடும் என்பது உறுதிதான். ஆதலால் சைமன் கமிஷன் விஷயத்தில் நாம் நமதுகடமையைச் செய்துவிட்டோம்.

இனும்! சுவிஸ் வைரம் இனும்!!

SWISS BRILLIANTS.

ஜெர்மன் வைரம் என்றும் அமரிக்கன்-நீவ்டயமன் என்றும் கூறப்படும் வைரங்களை விட சுவிஸ் வைரம் சிரேஷ்டமானதென்று நிபுணர்களால் ரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. சுவிஸ் வைரமானது ஒரு சம்மட்டியின் பலமான அடியாலும் உடைக்க முடியாதபடி அவ்வளவு கெட்டியானது. அது மிகவும் கெட்டியாக விருப்பதால் அதனுடைய ஜ்வலிப்பும், பிரகாசமும், மிகநேர்த்தியான மெருகும் 100 வருடங்கள் ஆனாலும் கூட மறைந்து போகாது சுவிஸ் வைரமானது எவ்வளவு நேரம் நெருப்பில் போடப்படினும், மாதக்கணக்காக எண்ணெயில் போட்டுவைத்தாலும் அதன் நிறம் மாறாது.

எங்களிடம் எல்லா சயிஸ் (அளவு) கல்களும் இருக்கிறது. காரட் விலை $2\frac{1}{2}$ வெள்ளி முதல் 5 வெள்ளி வரையில் ஒரு (1) சயிஸ் முதல் 50 சயிஸ் வரையில் வரி வடிவம் (படம்) எழுதப்பட்டதும் இன்னும் பல மாதிரி மாணிக்க கல்வெட்டுகளும் அளவும் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் இனும்.

ஒரு சாம்பிள் சுவிஸ் வைரம் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

எங்ளோ சுவிஸ் ஜெம் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 360. பினாங்கு.

The Anglo Swiss Gem Company,
P. O. Box 360, PENANG.

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின்
இரகசியங்கள்.
*Mysteries of Wedded Life.*
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட
இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்
வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவிதி. சென்னை.

விலை ரூ 2—0—0

ஜீவரசம்! ஜீவரசம்!!

சகல நோய்களுக்கும் தேவாமிர்தம் போன்றது

ஒரு பாட்டில் ஜீவரசம் உங்களிடமிருந்தால் வியாதிகளைப்பற்றிய கவலை வேண்டாம். இது ஓர் சிறந்த குடும்ப ஔஷதமென பல பெரியோர்களால் நற்சாக்ஷி பெற்றது. உண்மையறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள், பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0

முக்கிய வியாபாரிகள்:— லக்ஷிமி ஸ்டோர், ஈப்போ, F. M. S.
T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், மதுரை.
M. இஸ்மாயில் சாஹிப் அய்யன்கடை, தஞ்சாவூர்.

ஜீவரசம் கம்பெனி லிமிடெட்,
(2) காரைக்குடி S. I.

# ஈரோடு முனிசிபாலிட்டி.

## விளம்பரம்.

17-11-1927 தேதிய 4482 L, & M. நெம்பர் கவர்ன்மெண்டு உத்திரவின் 4 வது ரூல்படி ஈரோடு முனிசிபல் சேர்மெனவர்கள் இதன் மூலம் தெரியப்படுத்துவது யாதெனில், ஷை முனிசிபல் கவுன்சிலுக்கு பாத்தியமானதும் ஒப்புவிக்கப்பட்டதுமான அடியில் கண்ட ஸ்தாவர சொத்துக்களின் 1929 30 வருஷத்திற்கு அனுபவ பாத்தியதை 1929 வருஷம் மார்ச்சு மாதம் 30 தேதி சனிக்கிழமையன்று மாலை 4 மணிக்கு ஈரோடு முனிசிபல் ஆபீசில் பைசலுக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

| சொத்து விபரம். | | | குத்தகைக்கு கோரியவர்களின் பெயர். | ஏற்படுத்தப்பட்டவாடகை, |
|---|---|---|---|---|
| 1, லார்டு நேப்பியர் வீதிலிருக்கப்பட்ட 11 கடைகள். | (1) | மகா-ா-ஸ்ரீ | P. K. மாணிக்கம் செட்டியார் | 1, நெம்பர் கடை முதல் 6 நெம்பர் கடைவரைக்கும் கடை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ 15, ஷை மேரை 7 நெம்பர் கடை முதல் 11 நெம்பர் கடை வரை ரூபாய் 20வீதம் |
| | (2) | ,, | K. V. S ராதாகிருஷ்ண செட்டியார் | |
| | (3) | ,, | M. மகமது இஸ்மாயில் சாயபு | |
| | (4) | ,, | K, V S. பாலசுப்பிரமணிய செட்டியார் | |
| | (5) | ,, | ராஜரத்தினம் ரவுத் | |
| | (6) | ,, | S. V. சுப்பாவுத் | |
| | (7) | ,, | V, வெங்கிடசாமி ரவுத் | |
| | (8) | ,, | R, பச்சியண்ண முதலியார் | |
| | (9) | ,, | S R, M. ராமசாமி செட்டியார் | |
| | (10) | ,, | E. C. S, B. பரமசிவ செட்டியார் | |
| | (11) | ,, | V. சந்தான ரவுத் | |
| | (12) | ,, | B ராமலிங்க ரவுத் | |
| | (13) | ,, | M. அமீர் சாயபு | |
| | (14) | ,, | N. ராமசாமி | |
| | | மகா-ா-ஸ்ரீ | | |
| 2. பிஷர் வீதியிலிருக்கப்பட்ட 8 மூங்கில் கடைகள். | (1) | ,, | S, அப்துல் அஜீஸ்கான் சாயபு | கடை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4 வீதம், |
| | (2) | ,, | A. M, அப்துல் அபீஸ் சாயபு | |
| | (3) | ,, | S, M, இப்ருகிம் சாயபு | |
| | (4) | ,, | S, அப்துல் லத்தீப்கான் சாயபு. | |
| | (5) | ,, | K. மாரிமுத்து பிள்ளை | |
| | (6) | ,, | S. அப்துல் லத்தீப்கான்சாயபு | |
| | (7) | ,, | பாலசுந்திரம் செட்டியார் | |
| | (8) | ,, | S, அப்துல் அஜீஸ்கான் சாயபு | |
| | | மகா-ா-ஸ்ரீ | | |
| 3. கொல்லம்பாளையம் இட்டேரியில் 5 குயவன் சூளை இடங்கள் | (1) | ,, | சண்முகம் செட்டி | இடம் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு வாடகை ரூபாய் [illegible] வீதம், |
| | (2) | ,, | பெரியண்ண செட்டி | |
| | (3) | ,, | வையாபுரி செட்டி | |
| | (4) | ,, | செங்கோடன் செட்டி | |
| | (5) | ,, | நல்லதம்பி செட்டி | |

4. காரை வாய்க்காலுக்குப் பக்கத்தில் T, S. நெம்பர் 1425 உள்ள இடம்.
5 சத்தியமங்கலம் ரோட்டில் குப்பை சேர்க்கும் இடம்,
6 எடையன் காட்டு வலசிலுள்ள பாடசாலை இடம்,
7 ரெயில்வே சத்திரத்திற்குப் பின்னுள்ள தோட்டம், மற்ற முனிசிபல் இடங்கள்,
8, பெருந்துரை ரோட்டிலுள்ள பாடசாலை இடம்.
9. வனையக்கார வீதியிலுள்ள பாடசாலை இடம்,
10. கந்தசாமி செட்டியார் தோட்டத்திலுள்ள பாடசாலை இடம்.
11 லார்டு நேப்பியர் வீதியின் 83 நெ. பாடசாலை இடம்,
12, சாவிஸ் சிசாவாயர் ரோட்டில் புதிதாய் அக்கொயர் செய்த இடம்,
13 கரூர் ரோட்டிலுள்ள மலம் சேர்க்கும் இடம்.
14, பூந்துரை ரோட்டில் சக்கிலியர் குடிசைகளுக்குப் பக்கத்திலுள்ள இடம்.
15 பவானி ரோட்டிலுள்ள கஸ்தூரி பிள்ளை தோட்டம்,

} நிர்ணயிக்கப்படும்.

16, முனிசிபல் கவுன்சிலுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ரோட் மார்ஜின்களில் சில்லரைக் கடைகள் வைப்பதற்காக முதல் 50 சதுர அடி அல்லது அதற்கு குறைவான இடத்திற்கு மாதம் வாடகை ரூ, 5. மேற்கொண்டு ஒவ்வொரு 10 சதுர அடி இடத்திற்கும் மாதம் வாடகை ரூபாய் 1 வீதம்,

ஈரோடு முனிசிபல் ஆபீஸ்.
1929 ௵ பிப்ரவரி ௴ 25 ௳

ஒப்பம். கே. பாலசுப்பிரமணிய நாயுடு,
சேர்மேன்.

## நாளுக்கு நாணம்.

(பாரதி தாஸன் எழுதுவது.)

கருங் காலல்மேல் பொன்னிறக் கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே!
நேற்றுங் கண்டோம் முன்னை இக்கடல்மேல்
அதற்கு முன்னும், அதற்கு முன்னும்!
தினம் தினம் காலையில் சேர்வது கண்டோம்!
மாலையில் மேற்றிசை மறைவது கண்டோம்!
யாமுனைக் காணல்போல் நீளமைக் காண்கிறாய்!
அனைத்துத் தேசமும் நிதம் உனை அறிவன!
அவையெலாம் நீயும் அனுதினம் காண்கிறாய்!
சொல்லுவேன் இதுகேள் தொன்மைச்சுடரே!
நாளோருபுதுமை! மாதமோர் கன்னிலே!
உடுத்த ஆடை அடுத்தநாள் களைதல்போல்
புதிய புதிய செயல்கள் புரிந்திடும்
செகத்தைத் தினந்தினம் காணும்நீதான்,
எனது சமூகம் இழிநிலைநின்றும்
இம்மியெயர்ந்தது முண்டோ இசைப்பாய்
சாதி, சமயம் சாத்திரப் புராணம்
மனிதர்மனிதரைச் சாமியாய் வணங்கல்
ஆனவை பலவும் சமூகத்தை அழுத்தி
அழுத்திவருத்த அதன்கீழ் அழுந்திக்
"கண்ணுமட்டும் இருட்டை விட்டகலோம்"
என்றசொல்லும் இழிநிலைச்சமூகம்
எங்கேயிருக்கக் கண்டிருக்கின்றாய்?
கருங்கடலின்மேல் பொன்னிறக்கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே
எங்கள் நிலையின் ஈனத்தைக்காண
உள்ளம் நாணியோ உன்றன் ஒளியிற்
குன்றிக்குன்றி மேற்றிசை
சென்றிடுகின்றாய்? வேறென் செய்வையோ?

(புதுவைப்பூந்தேன் எழுதுவது.)

பணப்பையை வரப்பின்மேல் வைத்துவிட்டுச் சற்றுத்தூரத்தில் உள்ள குளத்தில் தண்ணீர் அருந்தப்போனான் குப்பன். இன்னொரு பாட்டைசாரி சந்தடி அறிந்து பையை எடுத்துக்கொண்டு நெருங்கினான். குப்பன் இன்னும் வரவில்லை. என்ன அறியாமை? பணப்பையோ பாட்டைசாரியைப் பார்த்து நகைக்கிறது. தூக்கிக்கொள்ளச் சொல்லுகிறது. பாட்டைசாரி அப்படியே செய்து தொலைத்தான். அதற்கு முன் பாட்டைசாரி நல்லவன். அவனைப் பொல்லாத குப்பன் கெடுத்து விட்டான்.

நாம் பிராமணர்களைக் கெடுத்துவிடுகிறோம். நாம் ஏமாறுத முற்காலத்தில் பிராமணர்கள் நல்லவர்கள் என்பதில் சந்தேகம் உண்டா? நம்மோடு ஜோலியில்லாத ஆஸ்த்ரேலியா தேசத்து நடுக்கு 22-ம் வீட்டிலுள்ள பேர் தெரியாத ஒருவனை நாம் பொல்லாதவன் என்று சொல்லுகிறோமோ? பார்ப்பான் மீது இரக்கம் வைத்து, நாம் நம் பொருளை அவன் அடையா விதம் செய்யலாகாதா?

நம்மவர்—ஸ்வாமி நமஸ்காரம்!

பார்ப்பானன்—ஆசீர்வாதம்.

மற்றொரு நம்மவர்—என்னகாண் பார்ப்பான் ஆசீர்வாதம் செய்ய வந்துவிட்டீர் அத்தனை உயர்ந்தவர்போலும் நீர்!

பார்ப்பனன்—நமஸ்காரம் சொன்னார் நான் ஆசீர்வாதம் சொன்னேன்.

எதிலும் ஞாயம்பெரிது. பார்ப்பனரை 'உயர்ந்தவரென்று' நாம் ஏன் அழைக்க வேண்டும்? நம்மை அவர் தாழ்ந்தவர் என்று சொல்லித் தொல்லையடையும்படி நாம் செய்யாமல் இருப்போமே. இதுசெய்து பார்ப்பனனைக் காக்கலாகா?

ஒருநாள் கொழுத்தவன் ஒருவன் தெருவே போய்க்கொண்டிருந்த நாயை இச் 'இச்' 'இச்' என்று கூப்பிட்டான், தோசையில் கொஞ்சம் போட்டான். மறு நாளும் சந்தர்ப்பம் அவ்வாறு நேர்ந்தது. மூன்றும் நாள் நாயைக் கூப்பிடவேயில்லை. இவனிடம் தோசைகூட இல்லை. நாய் வந்துவிட்டது. நாய்க்கு ஒரு லாபமும் இல்லை. வேலையும் கெட்டு விட்டது. நாயின் வேலையுமல்லவா கெடும்படி இவன் வைத்து விட்டான்.

பாடுபட்டுப் பணந்தேடப் பார்ப்பனனுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துவிடவேண்டும். ஐயோ பாவம்! இது செய்யலாகாதா? எல்லாம் செரிந்தும் நாம் தமாஷாகப் பார்ப்பனனைத் திவசம் என்றும் கருமாதி என்றும் அழைத்து விடுகிறோம் அவனும் இரண்டு கெட்டவனாய் வந்து விடுகிறான். அதிகம் விவரிக்க நினைக்கவில்லை. அவனை வாழா நிலைக்குக்கொண்டு வருகிறோம்.

ஒருவன் 'சாண்டோ' என்று சொல்லிக்கொண்டான். தெருப்பிள்ளைகள் பயந்தனர்கள். பயந்து நடந்தார்கள் காசுகொடுத்தார்கள். சில நட்பின் அண்டைத்தெருவில் சாண்டோவுக்கு ஒரு ஜோலி ஏற்பட்டது. அது முற்றியது. கடைசியில் கிழவி ஒருத்தி சாண்டோவை எட்டி உதைத்தாள், சாண்டோ மண்ணிற்புதைந்து கொண்டார், அதுதான் துவக்கம். நாளடைவில் சாண்டோ தத்துவம் வெளுத்துக்கொண்டே வந்தது. கடைசியில் சாண்டோவுக்குக் கைகள் பிரயோஜனமற்றன. அவருக்கு அடிநாள் முதல் தாயார் சாதம் ஊட்டாவிட்டால் சாண்டோ தரையில் கவிழ்ந்துதான் கொள்ளவேண்டும் என்ற விஷயமும் வெளிப்பட்டது. பிறகு சாண்டோ தம் கைகளை மறைத்துக்கொள்வதுமில்லை தொங்கிய கைகளைக் காட்டிய வண்ணமே திரிந்தார். ஆனால் சாண்டோ என்ற பெயர் மாத்திரம் மாறவில்லை. அவரைத் தற்செயலாய் ஒருவன் 'சாண்டோ' என்று கூப்பிடுவதும் அதை மற்றவன் கேட்டால் இவனை சாண்டோ என்று தலையில் அறைவதுமாய் இருந்தது. சாண்டோ என்று கூப்பிடாமல் இருப்பதையே எதிர் பார்த்தார் சாண்டோ. சாண்டோ என்று நம்பும்போதே சாண்டோ என்ற தத்துவம் பொய், விஷயம் தெரிந்து தொலைந்த பின் அது மெய்யா? இல்லாத ஒரு விஷயத்தை உயர்வென்று கருதும் பொல்லாப்பை அந்த மனிதன்மேல் சார்த்துவதால் தெருப்பிள்ளைகளால் அடிபட்டு அடிபட்டு அடிபட்டுத் தொலைந்தனர்.

நாம் பார்ப்பான் மேல் வைக்கத்தகாத பொல்லாப்பை ஏன் வைக்கவேண்டும்? சீக்கிரம் இந்தக் கோவில், வேதம், மந்திரம், இதிகாசம், புராணம் மனுஸ்மிருதி முதலியவைகளைக் காறியுமிழ்ந்து பார்ப்பானைக்காப்போம் அன்பர்களே! இவைகளை வைத்துக்கொண்டு நமது பார்ப்பனரைத் தொல்லையுறப்பண்ணினால் இவ்வளவு காலத்துக்குப்பின் அவர் எங்கே ஒதுங்குவது? பார்ப்பனர் மிக்க நல்லவர்கள். நாம் கெடுக்கிறோம்.

## தென் இந்திய மருத்துவர் சங்கம்.
### ஓர் பொதுக்கூட்டம்.

20—2—29 ம் நாள் மாலை 5 மணிக்கு சென்னை தங்கசாலை வீதி தென் இந்திய மருத்துவர் சங்க நிலையத்தில் திருநெல்வேலி ஜில்லா (மருத்துவர்) சங்கத்தலைவர் மருத்துவர் திரு. மு. குலசேகரம் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம் கூடியது.

தென் இந்திய மருத்துவர் சங்கத்தலைவரும் (மருத்துவர்) [illegible] ஆனந்த[illegible] அவர்கள் செங்கல்பட்டு [illegible] மருத்துவர்கள் [illegible] ஏழைகளாயிருப்பினும் தங்கள் [illegible] 18 வயதிற்குள் பணம் சம்பாதிக்க தொழில்களில் விடக்கூடாது, மருத்துவ மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய [illegible], உடை, இருப்பிடம், புத்தகம், சம்பளம், முதலியவைகள் கொடுக்க, பெற்றோர்களுக்கோ அல்லது வளர்ப்பவர்களுக்கோ சக்தியில்லாவிடில் மருத்துவர்கள் [illegible] ஜில்லாக்களிலுள்ள மருத்துவர் சங்கத்[illegible] யாக நடத்தி [illegible] வருவதோடு [illegible] மருத்துவர்களில் [illegible] உதவியினால் [illegible] சங்கத்தின் உதவியிலாவது 18 வயது வரை கட்டாயம் [illegible] வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவர அத்தீர்மானம் டாக்டர் [illegible] அவர்களாலும் திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கக்காரியதரிசி, மருத்துவர் [illegible] ராலும் ஓரே மனதாய் ஆமோதிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேறியது.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் பொருள் என்னவென்றால் தங்கள் ஆசைக்கும் மன உணர்ச்சிக்கும் விரோதமாய் வேறு நிர்ப்பந்தத்திற்காக அடிமைப்படுவதையே தான் இங்கு நாம் விபசாரம் என்று கொள்ளுகின்றோம்.

எப்படி ஒரு பெண் கல்யாணமில்லாத ஒரு பொதுமகள் பணத்திற்கு ஆசைப்பட்டு தனக்கு இஷ்டமில்லாத நிர்ப்பந்தத்திற்கு சில சமயங்களில் உடன்பட வேண்டியிருப்பதாக வைத்துக் கொண்டாலும் கல்யாணமான குடும்பப் பெண்களும் வெறும் ஆகாரத்திற்கும் துணிக்குமாக மாத்திரமே எப்போதும் தனக்கு சற்றும் சுதந்திரமில்லாமலும் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மனித உரிமைக்கும் உணர்ச்சிக்கும் இஷ்டத்திற்கும் விரோதமாகவும் நிர்ப்பந்தத்திலேயே ஜெயிலில் உள்ள கைதிபோல் இருக்கவேண்டியிருக்கின்றது. இத்தன்மை பொருந்திய மணம் பொறுப்புள்ள மணமா, காதல் மணமா, இன்பமணமா, அல்லது பொறுப்பற்ற மணமா, விபசார மணமா, அடிமை மணமா, நிர்ப்பந்த மணமா என்பதை யோசித்துப்பார்க்கும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். கல்யாணத்தின் விஷயமாகப் பின்னால் எழுதுவோம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### பெண்கள்.

இந்தச் சமயத்தில் இன்னொரு விஷயமும் சொல்ல ஆசைப்படுகின்றேன். அதாவது சமூக சம்மந்தமான எந்த முயற்சியானாலும் எப்படிப்பட்ட சீர்திருத்தமானாலும் நமது பெண்மணிகளுடைய மனமொத்த ஒத்துழைப்பில்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாது என்பதுதான். சமூகத் துறை மாத்திரமல்ல வேறு எத்துறையினாலும் ஆண்களும் பெண்களும் மனமொத்து ஒருமைப்பாடுடன் முயற்சித்தால் உலகத்தில் முடியாத காரியம் என்பது ஒன்றில்லை என்றே சொல்லுவேன்.

சமூகத்துறையில் ஆண்களைவிட பெண்களே முக்கிய ஸ்தானம் வகித்து வருகின்றார்கள். ஆகலால் நாம் உண்மையிலேயே நமது இயக்கம் வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர்களானால் முதலாவதாக நமது பெண்களைச் சீர்திருத்தத் துறையில் கற்பிப்பதிலும் அவர்களுக்கு இவ் விஷயங்களை எடுத்துச் சொல்லி ஒப்பச் செய்வதிலுமே நமது முக்கிய கவனம் இருந்து வரவேண்டும். பெண்கள் முன்னேற்றமே சுயமரியாதை இயக்க முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமானது.

ஆகலால் நாம் முக்கியமாக நமது பெண்கள் சுயமரியாதையை அடையவும் அவர்களுக்கு உண்டாக்கவும் சமுதாய புனருத்தாரண கொள்கைகளை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கையாளச் செய்யவும் உண்மையாக முயற்சி செய்வதுடன் அவர்களுக்குத் தாராளமாக இடம் கொடுப்போமாக.

இந்த ஒரு காரியத்தில் நாம் வெற்றி பெற்றோமானால் இனிமேல் நமது நாட்டில் பிறக்கும் குழந்தைகள் பண்டைய மூடப்பழக்க வழக்கங்களுக்கும் குருட்டு நம்பிக்கைகளுக்கும் ஒருக்காலமும் ஆளாகமாட்டார்கள். அவற்றை சிறிதும் லக்ஷியமும் செய்யமாட்டார்கள். அந்தக்காலமே இந்தியாவின் உன்னத நிலையாகும். அப்போது பார்ப்பனன், ஆதிதிராவிடன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், அந்த ஜாதி இந்த ஜாதி என்பது போன்ற வேறுபாடு அபிப்பிராயங்கள் தோன்றாமல் ஒரே சமூகமாகவும் ஒத்த சகோதரர்கள் போலவும் ஒருவருக்கொருவர் காணப்படுவார்கள். இந்நிலை எய்தின அன்றைக்கே சுயராஜ்யம் என்பது நமது காலடியில் கிடக்கும்.

அன்றியும் அது மறுபடியும் சுலபத்தில் பேர்க்கமுடியாத உறுதியான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்ட சுயராஜ்யமாகவும் இருக்கும். அப்போது நமது நாடு மற்றைய நாடுகளைப் போல் முன்னேற்றமடைந்து சுயமரியாதை பெற்ற நாடாக விளங்கும்............... (பிறகு சங்க அமைப்பைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு கடைசியாக)

நண்பர்களே இவ்வளவு நேரம் நான் பேசியவற்றை பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்ததற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்து விட்டு மிக்க மகிழ்ச்சியோடு இம்மகாநாட்டை திறந்து வைக்கின்றேன். இந்த இயக்கம் நன்குப் வெற்றி பெறவும் நாம் எல்லோரும் இதற்கு சற்றும் சுயநலமில்லாத உண்மையான உழைப்பாளிகளாய் இருந்து உழைக்கவும் வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு அமருகிறேன்.

## இராமநாதபுரம் ஜில்லாவில் சுயமரியாதை மகாநாட்டின், முதற்பலன்.

திராவிட சகோதர சகோதரிகளே! நமது மாபெருந்தலைவர் உயர் திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் அவர்கள் இவ்வூருக்கு இரண்டொரு தடவை விஜயம் செய்ததன் பலனாக, நாடார்களில் பலருக்கும் சைவர்களில் அநேகருக்கும் மற்றும் சிலருக்கும் சுயமரியாதை ஞானம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மகாநாட்டுக்கு விஜயம் செய்து விட்டு வந்த இவ்வூர் கனவான்களாகிய ஸ்ரீமான்கள், மு. சி. காமாக்ஷி நாடார், கூ. அ. காளியப்ப நாடார், வட காசிப்பிள்ளை - கர்ணம், பொன்னுசாமிபிள்ளை ஆகிய இவர்கள் மேற்படி மகாநாட்டின் தீர்மானங்களின்படி பாடசாலை, கோவில், திருவிழா, சமத்துவம் இவைகள் விஷயமாக அதிக சீர்திருத்தங்கள் செய்ய முன் வந்திருக்கிறார்கள். அதாவது இவ்வூரில் நாடார்களுக்குச் சொந்தமான மாரியம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. அதற்கு அடுத்த பங்குனி பௌர்ணமியில் உற்சவம் நடப்பது வழக்கம். உண்மைச் சுயமரியாதை வீரர்களாகிய மேற்படி நாடார் கனவான்கள் தாம் மேற்படி உற்சவத்திற்கு ஒரு பைசாக்கூட செலவு செய்யக்கூடாதென்றும், இப்பொழுது பூஜை செய்யும் பார்ப்பானை நீக்கிவிட வேண்டும் என்றும், இவ்வூர்ச்சுற்று வட்டகை, கொங்கர்குளம், மீனாக்ஷிபுரம் முதலிய பட்டிகளிலுள்ள ஆதிதிராவிடர்கள் மேற்படி கோவிலுக்குள் பிரவேசித்துப் பூஜை செய்யலாமென்றும், தாங்கள் மானேஜர்களாக இருந்து நடத்தக்கூடிய பாடசாலையில் பார்க்கும் பார்ப்பன உபாத்தியாயர்களை நீக்கி பார்ப்பனரல்லாத சுயமரியாதை வீரர்களை உபாத்தியாயர்களாக நியமிக்க வேண்டும் என்றும், சைவர்களும் நாடார்களும் விசேஷ நாட்களில் சமபந்தி போஜனம் செய்ய வேண்டியதென்றும் ஏற்பாடுகள் செய்து கொண்டு வருவதை நோக்க, நம் சுயமரியாதை இயக்கத்துக்கே ஒரு பெரும் புகழை மேற்படி கனவான்கள் சம்பாதித்து வருகிறார்கள் என்று பெருமையுடன் சொல்லலாம். செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாடு இவ்வளவு விசேஷ பலனை அளிக்கும் என்று இவ்வூரில் ஒருவரும் கருதியதில்லை. மேற்படி கனவான்களுடைய முயற்சிகள் சித்தியடையவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன் என ஒரு வாசகன் எழுதுகிறார்.

---

### கமுதி வித்தியாபிவிருத்தி சங்கத்தார்.

கானது 1929-௵ பிப்ரவரிமாதம் 24ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 30 மணிக்கு நமது சங்கத்தின் முன் அமைத்திருக்கும் கொட்டகையில் ஈரோடு (குடி அரசு) பத்திராதிபரும் வைக்கம் வீரரும் சுயமரியாதை இயக்கத்தலைவருமான உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்களுக்கு ஓர் சிறந்த வரவேற்பு அளித்தனர்.

## கமுதியில் சுயமரியாதைப் பிரசாரம்.

### கமுதி வித்தியாபி விருத்தி சங்கத்தாரால் திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு நல்வரவு வந்தனோபசாரக் கொண்டாட்ட வைபவம்.

குடி அரசு பத்திராதிபர் ஈரோடு திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாரவர்கள் 24-2-29ல் ஞாயிற்றுக்கிழமை போட்மெயிலில் மானாமதுரை மார்க்கமாய் பகல் 2 மணிக்கு இவ்விடம் வந்து நமது க்ஷத்திரிய வித்தியாசாலையில் தங்கி 3 மணிக்கு மேளவாத்தியத்துடன் சங்கத்தின் அங்கத்தினர்களும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும் சூழ ரதத்தில் ஊர்வலம் வந்து சங்கத்தின் முன் அமைத்திருக்கும் வித்தியாபிவிருத்தி மஹாலில் 4 மணிக்கு பிரசங்க மேடையில் ஆரோஹணித்தார்கள். கொட்டகையின் அலங்காரமும் பல வில் வளைவுகளும், வாக்கியங்களும் கண்ணை கவர்ந்தன.

நல்வரவு வைபவம்

கூட்டத்திற்கு திரு. மா. ச. மா. பொன்னுசாமி நாடாரவர்கள் அக்கிராசனம் வகிக்க திருவாளர் டி. செல்லையா நாடாரவர்களால் தலைவர்களைப் பற்றி சபையோர்களுக்கு அறிமுகம் செய்த பின்னர் கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பிற்பாடு சங்கத்தின் உப அக்கிராசனர் திரு. ஏ. மகாலிங்க மூர்த்தி நாடாரவர்கள் தலைவர் பெரியாரவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளித்து மிக குதூகலத்துடன் இடைவிடா கரகோஷத்தினிடையே தலைவர் அவர்களுக்கு மாலை சூட்டினார்.

பெரியாரவர்கள் ஆசனம் விட்டெழுந்து ஏக கரகோஷத்தினிடையே பத்திரத்துக்குத் தக்கவாறு மறுமொழி ஈந்து தன் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்து சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும், நோக்கத்தைப் பற்றியும், தெளிவாய் ஜனங்கள் மனதில் உள்ளம் உருக சுமார் 3 மணிநேரம் அரிய பிரசங்கம் நிகழ்த்தினார்கள்.

அதன்பின் சுயமரியாதைச் சங்கத்தின் தொண்டர் திருவாளர் சி. கருப்பையா அவர்கள் இயக்கத்தைப்பற்றியும், செங்கற்பட்டு சுயமரியாதை மாகாண மகாநாட்டின் வைபவத்தைப்பற்றியும், தீர்மானங்களைப் பற்றியும் விருதுநகரில் திரு. வி. கல்யாண சுந்தரமுதலியார் பேசியதைப்பற்றியும் திரு. திருகூடசுந்தரம்பிள்ளை திரு. கைலாசம் செட்டியார் முதலியவர்கள் திரு. முதலியாரைக் கண்டித்து முதலியாருக்குப் புத்தி கற்பித்ததைப்பற்றியும் எடுத்துரைத்து ஒவ்வொரு கிராமமாயிருந்தாலும் அங்கங்கு கிராம சங்கங்கள் ஏற்படவேண்டுமென்றும் அவைகள் நகரச் சங்கங்களில் இணைக்கப்படவேண்டும் என்றும் தொண்டர்கள் தீவிரமுயற்சி செய்து ஒவ்வோர் சிறு கிராமங்களிலும் இயக்கத்தை வலுக்கச் செய்யவேண்டுமென்றும் சொல்லியமர்ந்தார். கடைசியாக வைஸ்பிரசிடெண்டு அவர்களால் தலைவர்களுக்கும் மற்றும் கனவான்களுக்கும் வந்தனோபசாரம் கூறி முடிவுபெற்றது. கமுதி நிருபர். 24—2—29.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையும் பிறப்பால் உரிமையுள்ள தன்னை வஞ்சித்துத் தன் தந்தை இராமனுக்கு நாடளிக்க முயன்ற உண்மையும் தெரியாது. அவன் உண்மையாகவே தன்னுடைய தாய் வம்புக்காரி, அவள் இராமனை வஞ்சித்துத் துரத்திவிட்டாள். அதனால் கொடிய பாவம் தனக்கு வந்து சேரும் என்று நம்பி ஏங்குகிறான். இவ்வாறு அவனுடைய அச்சமும் அசாரமும் அவனுக்கு மன நடுக்கத்தைத் தந்தன. மேலும் கைகேசியும் கூட பரதனே பிறப்பால் அரசுரிமையுடையவன் என்பதை உணராளே. உணர்ந்திருப்பின் கட்டாயம் அதைக் கூறி பரதனைத் தன்வசப்படுத்தியிருப்பாள். இவ்விபரீதங்களினாலேயே பரதன் மிகவும் பழிக்கு அஞ்சினவனாய்த் தன் தாயைத் தாயென்றும் பாராமல் கயிறிட்டு உயிரை விடு எனப் பல்வாறு தகாதபடியால் நிந்திக்கிறான். தன்னைப் பெற்ற தாயை நிந்திக்க இவன் மக்களுக்கு ஓர் வழிகாட்டியே! இவனைப்பார்த்து உலகத்தார் நடப்பரேல் உலகம் விரைவிற் கெட்டழிவது திண்ணம். தன் தாய் தவறி நடந்தால் அவளைக்கண்டிக்கும் முறை வேறு.

பரதனைப்பார்க்க வந்த கோசலை அவனைக்கடினமாக நிந்திக்கிறாள். பரதன் மனம் துடிக்கிறான். அப்போது அவன் கூறியதில் எள்ளன்னம் பாயசம் ஆட்டின் மாமிசம் இவைகளைத் தேவதைகளுக்கும் விருந்தினருக்கும் தென் புலத்தாருக்கும் ஊட்டாமல் எவன் உண்கிறானோ அவன் நரகமடைகிறான் என்று கூறப்படுகிறது. இதுவும் நாம் முன் கட்டுரைகளில் ஆரியரைப்பற்றிப் புலாலுண்போரென்று கூறிய உண்மையை வலியுறுத்தும். விருந்தினர் வந்தபோது புலாலுணவு அவர்களுக்கு இன்றியமையாதது. தெய்வம் தொழும்போது உயிர்க்கொலை அவர்களுக்கு இன்றியமையாதது. இதை நாம் மேலே கட்டுரைகளில் சீதை கங்கைக்கும் யமுனைக்கும் நேர்ந்து கொண்டபோது பல உயிர்ப்பிராணிகளை வதைத்துத் திருப்தி செய்கிறேன் என்ற வரலாறே இதற்குச் சான்றாம். மேலும் இவர்கள் பிதிர்களைத் திருப்தி செய்வதற்கும் மாமிசம் இன்றியமையாதிருந்தது. இதற்கு இவர்களுடைய மனுநீதி சாத்திரம் மேற்கோளாயிருக்கிறது. மேற்கோளாச் சிலவற்றை இங்கே அங்கிருந்து குறிப்போம்.

பிதுரர்களுக்குத் திதி கொடுப்பதைப் பற்றி மனுஸ்மிருதி மூன்றாவது அத்தியாயம் விளக்கக் கூறுகிறது. அதில் சுலோகம் 268-ல் 'பாடீனசம் முதலிய மச்ச மாமிசத்தாற் சிரார்த்தம் செய்தால் பிதுர்க்கள் இரண்டு மாதம் வரையிலும் திருப்தியடைகிறார்கள். அரிணமென்கிற மான் மாமிசத்தாற் செய்தால் மூன்று மாதம் வரையிலும், செம்மறியாட்டு மாமிசத்தாற் செய்தால் நான்கு மாதம் வரையிலும், பறவைகளின் மாமிசத்தாற் செய்தால் ஐந்து மாதம் வரையிலும் திருப்தியடைகிறார்கள்.' சுலோகம் 269 'வெள்ளாட்டின் மாமிசத்தாற் செய்தால் ஆறுமாதம் வரையிலும், புள்ளிமான் மாமிசத்தாற் செய்தால் ஏழு மாதம் வரையிலும், கருப்புமான் மாமிசத்தாற் செய்தால் எட்டு மாதம் வரையிலும், கலைமான் மாமிசத்தாற் செய்தால் ஒன்பது மாதம் வரையிலும் திருப்தியடைகிறார்கள். சுலோகம் 270 முள்ளம்பன்றி, காட்டெருமைக்கடா இவைகளின் மாமிசத்தாற் செய்தால் பத்து மாதம் வரையிலும், முயல் ஆமை இவைகளின் மாமிசத்தால் செய்தால் பதினொரு மாதம் வரையிலும் திருப்தியடைகிறார்கள்.' சுலோகம் 271. பசுவின் பால், தயிர், நெய் இவைகளாற் சிரார்த்தஞ் செய்தால் ஓராண்டு வரையிலும், தண்ணீர் குடிக்கும்போது இரண்டு காதும் தண்ணீரிற்படக் குடிக்கின்ற கூர்மையான இந்திரியத்தையுடையதாகிய வார்த்தீனசமென்னும் கிழ வெள்ளாட்டுக்கடாவின் மாமிசத்தாற் செய்தால் பன்னிரண்டு ஆண்டுகள் வரையிலும் திருப்தியடைகிறார்கள்.' சுலோகம் 272 'அந்தந்தக் காலத்திலுண்டான கறியமுதும் முள்ளுள்ளவாளை மீனும், கட்க மிருகம், சிவந்த ஆடு இவைகளின் மாமிசங்களால் செய்தால் அளவற்ற நாள் வரையில் திருப்தியடைகிறார்கள்' சுலோகம் 123. மாதந்தோறும் செய்யத்தக்க அமாவாசியா சிரார்த்தத்தை புதிதாயும் நாற்றமில்லாமலும் இருக்கிற மாமிச முதலியவற்றாலே செய்யத்தக்கது! ஐந்தாம் அத்தியாயம் சுலோகம் 16 ஆயிரம் பல்லுள்ளயுடைசமென்னும் மீனும் சிவப்பு மீனும் எக்கியத்திலும் சிரார்த்தத்திலும் விதிக்கப்பட்டிருக்கிறது. கும்பலோடு சஞ்சரிக்கிற மீனும் சிங்க முக மீனும் முள் மீனும் மற்றக்காலங்களில் உண்ணலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சுலோகம் 18. 'முள்ளம்பன்றி சல்லியமிருகம், உடும்பு, காண்டாமிருகம், முயல் இவ்வகள் ஐந்து நகங்களாயிருந்த போதிலும் உண்ணலாம். ஒரு பக்கம் பல்லுள்ள மிருகங்களில் ஒட்டகம் நீங்கலாக மற்றவைகளை உண்ணலாம்' சுலோகம் 28. 'பிரமன் இவ்வுலக முழுவதும் சீவனுக்கு ஆகாரமாக உண்டு பண்ணினார் ஆகையால் நெல் முதலான தாவரமும் மிருக முதலான சங்கமமும் சீவனுக்கு ஆகாரமாகவே இருக்கின்றன' சுலோகம் 30. ஆதலால் பிராமணன் புசிக்கத்தகுந்த பிராணிகளை தினந்தோறும் புசித்த போதிலும் பாவத்தையடைய மாட்டான். புசிக்கத்தக்கவர்களும் கொல்லத்தக்கவைகளும் பிரமனாலேயே படைக்கப்பட்டிருக்கிறதல்லவா?

மேலே கண்டவைகளைச் சிந்தித்தால் ஆரியர் எவ்வளவு தூரம் இழிவான அறிவுடையவர்களாயிருந்தார்களென்பதை உணரலாம். மனிதன் தின்பதற்காகவே மிருகங்களையும் பறவைகளையும் பிரமன் படைத்தானென்று அவர்களுடைய சட்ட நூலாகிய மனுஸ்மிருதியே கூறுகிறதே! என் அநியாயம்! இவ்வளவு கேவலமான அறிவுடைய மக்களும் இருந்திருப்பார்களா? மிருகங்கள் தின்பதற்காவே மனிதனை பிரமன் படைத்தான் என்று அம்மிருகங்கள் விதித்துக்கொண்டு மனிதர்களைக் கொல்லத்துணிந்தால் இம்மனு முதலிய அறிவற்ற மிருகங்கள் யாது கூறுமோ? இம்மனுவை பகுத்தறிவுள்ள மனிதனென்பதா, அறிவற்ற மிருகமென்பதா? இவன் பகுத்தறிவற்ற மிருகமென்பதை நன்கு நிரூபித்து விட்ட பின்னரும் இவனை மனிதனென்று எவ்வாறு சொல்வது? இச்சகல மிருகத்தை ஒரு வகுப்பார் தமது நீதி நூலாசிரியன் எனப்பாராட்டுகின்றனரே? பரிதாபம்! இதனால் இவ்வாரிய மக்கள் புலாலுண்ணுந் தன்மை மிக விபரமாகத் தெளிவாகின்றது. இதற்குச் சான்றாக இக்காலத்திலும் சென்னைமாபுரிக்கு வடக்கேயுள்ள பார்ப்பன மக்களனைவரும் புலாலுண்ணுபவராக இருத்தலே அமையும். வடநாட்டுப் பார்ப்பனருள் புலாலுண்ணாதோர் கிடைப்பது அருமையாயினும் அருமை. தென்னாட்டுப் பார்ப்பனரோ தமிழ் மக்களிடைக் காணப்படும் மிகச் சிறந்ததான கொல்லாமையைக் கற்றுக்கொண்டனர். அதனால் புலாலுணவையும் மறந்தனர். ஏனெனில் அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ளாதிருப்பின் அவர்களைக் கேடு கெட்ட மிருகங்களாகவே தமிழ் மக்கள் மதித்திருப்பர். ஆனால் தென்னாட்டுப் பார்ப்பனரோ அடிக்கடி பல வேள்விகள் புரிந்து எண்ணிறந்த ஆடுகளைக் காயடித்துக்கொன்று நெய்யிலிட்டுப் பொரித்துத் தின்கின்றனர். இதை அவர்கள் தேவதைகளுக்குப் பிரியமான செயலென்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றி வந்ததோடு அமையாது தமிழ் மக்களிற் சிலரையும் தம் வசப்படுத்தி சிறு தெய்வ வழிபாடுகளைப் புகுத்தி கடவுள் மிருகங்களை மனிதர்கள் தின்பதற்காகவே படைத்தார் என்ற தீய கொள்கையையும் பரப்பிப் பலரைப் புலாலுணவு உண்ணுமாறும் செய்து விட்டனர். ஆரியருக்கும் தமிழருக்கும் ஏற்பட்ட பழக்கத்தால் ஆரியர் புலாலுணவைக் குறைப்பதையும் தமிழரிற்சிலர் புலாலுண்பதையும் கற்றுக்கொண்டனர். மேலும் தேவதைகளுக்குப்பூசை செய்யும்போது கட்டாயம் ஆடுமாடுகளைக் கொன்று தின்னவேண்டும் இல்லையானால் பாவம் வந்து சேரும் என்ற தப்பான தீய கொள்கையையும் தமிழ் மக்களிற் சிலரிடைப் புகுத்தினர். இது எதனால் விளங்குகின்றதென்றால், மேலே பரதன் ஆட்டுமாமிசத்தை தேவதைகளுக்கு ஊட்டாமல் உண்பவன் அடையும் பாவத்தில் போகிறேன் இராமனுக்குத் தீமை நினைத்திருந்தால் என சூளுரைப்பதால் இது தெளிவாகிறது. ஆனால் தற்போது பலர் இதன் உண்மையை உணரத் தொடங்கியுள்ளர். ஆனால் சிறு தெய்வ வழிபாடுகள் ஒழிவதோடு பலியிடுவதும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இது கண்ட பார்ப்பனர் அடிக்கடி மிருதியாகயாகமென்று பெயர் வைத்துப் பல ஆடுகளை வதைத்து கொல்லுவதில் முனைந்துளர். பரிதாபம்! இத்திய ஆரியச் சூழ்ச்சித் தீமைகள் ஒழிந்து கொல்லா விரதம் இக்குவலயமெல்லாம் ஓங்குநாள் எந்நாளோ என்று அறிஞரனைவரும் வேண்டும் முயற்சிகளைச் செய்து கொல்லா விரதத்தைப் பரப்பவேண்டும்.

தமிழ் மக்கள் மறந்தும் பிறன் கேடு சூழா மாண்பினர். இன்னா செய்தாரைத்தண்டிக்க அவர் நாண நன்னயஞ் செய்யும் நடையினர். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வது தான் சால்பெனக்கொண்டு யாவருக்கும் நலமே புரிவர். ஆதலின் தமிழ் மக்களனைவரும் தமது முன்னோரியல் புணர்ந்து நல்வழிப்படுமாறு வேண்டுகின்றோம்.

---


## பெண் தேவை.

நல்ல வசதியிற் றேறின உத்தியோக முறையில் ரூ 40 வருமானமும், 27 வயதுள்ளவருமான ஓர் இந்து வாலிபருக்கு நல்ல அழகுள்ளதும், தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்ததும், நல்ல குணத்தை அமையப்பெற்றதுமான 18-வயதுக்கு மேற்படாத ஓர் இந்து பெண் தேவை. ஜாதி வித்தியாசமில்லை. விதவைப் பெண்ணாயினும் சரியே. பெண் இனியும் வாசிக்க விரும்பினும் அல்லது சித்திரம் போன்ற கைத்தொழில் பயில விரும்பினும் இயன்ற உதவி அளிக்கப்படும்.

K. S ஆர்டிஸ்ட்,
C/o குடி அரசு,
ஈரோடு.

---

## கக்குவானுக்கு

ஹரிதாசர் மருந்து மிகவும் கைகண்டது. பூரண சுகமாகும். பத்துநாள் மருந்து ரூபா 1—0

## காலராவுக்கு

ஹரிதாசர் தனிமருந்து மிகவும் அற்புதமானது. வாந்திபேதி ஒரே வேளை மருந்தில் சுகமாகும். விலை ரூபா 1—4—0. வி. பி. செலவு அணா 5.

Dr. H. தாசர் B. A.
சித்த வைத்தியசாலை, திண்ணனூர் R. S.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆடம்பரமான சீரும் சடங்கு கிரிகைகளும்பண்ணி சுடுகாடு போய்த் தீர வேண்டும். சூத்திரனே சாஸ்திரம் படிக்கக்கூடாது பாப்பான் ஏவல் தவிர வேறொன்றும் செய்யாமலிருக்கக் கட்டுப் பட்டவன் இவன் பிணம் கிடைத்தாலும் மற்ற மூன்று வருணத்தார்களும் இவன் பிணத்தைத் தொடப் படாதவர்கள் தீண்டப் படாதவர்கள் பார்க்கப் படாதவர்களாகி விட்டார்கள் இத்தனை வர்ணாஸ்ரம ஏற்பாட்டையும் கடந்து வந்தாலும்உடன் கட்டை ஏறுவது பெரிய கட்டாய தருமமாக விளங்கிற்று அதனால் பெண்ஜாதி பிணத்தை விட மாட்டாள். அவளுக்கு உடன் கட்டை ஏற சம்மதமில்லாவிட்டாலும் அவளைக் கொளுத்த அவள் சுற்றத்தாரும் புரோகிதர்களும் வந்து விடுவார்கள் அறியாமையோடு அவளுக்கு ஆதரவுமில்லாமல் உலக நிந்தைக்குப் பயந்து விசனத்தால் சோர்ந்து இருப்பவளை கொலையாளியைத் தூக்கு மேடைக்குக் கொண்டு போவது போல தருமத்தை நடத்தி வைக்கும் புரோகிதர்கள் அவளையும் கூடவே கொளுத்த கிரிகைகள் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அந்தப் பிணம் புரோகிதனுக்கு சொந்தமாய்விடும் பின் அனுலோப பிரதிலோப ஜாதிகள் இவர்கள் தங்கள் ஜாதிகளை உயர்த்திக் கொண்டு போவதே வழக்கம் பாப்பான் பிணத்திற்கு பதினொன்று நாள் தீட்டென்றால் இவர்கள் பிணத்திற்கு பதினாறு நாள் தீட்டு வேண்டும் பாப்பார கிரிகைகளையெல்லாம் இவர்கள் செய்தால் தான் ஜாதியில் உயர்ந்தவர்கள் என்று மற்றவர்கள் கருத இட மேற்படுமென்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள். காஷாயம் உத்திராக்ஷம் திருநீர் முதலியவை அணிந்த சந்நியாசிப் பிணங்கள் சொர்க்கத்திற்குப் போய்விட்டவைகள் அதை சமாதி பண்ணியே தீரவேண்டும். ஜாதி வருணம் தெரியாமல் அனாதையாய் கிடக்கும் பிணத்தை யார் தொடுவர்? தண்ணீர் கொடுத்தாலே தீட்டு வந்துவிடுமென்று நினைக்கும் சமயவாதிகள் இந்தக் காலத்திலேயே இருக்கையில் கூட்டோடு கைலாயம் போன அந்தக் காலத்தை நீங்களே நினைத்துப் பாருங்கள். இத்தனை கஷ்டத்திலும் பிணம் கிடைத்தாலும் தொட்டு அறுப்பதற்கு வருணம் இடம் கொடுக்கவில்லை தொடுவதற்கு சமயம் சம்மதிக்கவில்லை இத்தனைக்கும்மீறி பிணத்தை தொட யாருக்கு தைரியம் வரும் வந்தாலும் பிணத்தை தொட்டு அறுத்து உடற்கூறிலக்கணம் கற்றுக் கொள்ள யாருக்கு என்ன அவசிய மேற்பட்டது. உலகத்தில் மனிதன் பிறந்தது பரலோக சுகத்திற்கும் பரலோகத்தில் கடவுளிடம் போகவும் என்பதாக வேதமுதல் புராணம் வரையிலும் சொல்லி விட்டது. பாப்பானே படித்து பரலோகத்திற்குஎல்லோருக்கும்வழிகாட்டிக்கொண்டிருக்க வேண்டும் அதற்காகஇந்த உலகத்திலிருக்கிறஎல்லாப்பொருள்களும் அவனுக்குச் சொந்தம் யாருடையதாகஇருந்தாலும் உத்தரவில்லாமல் எடுத்துக்கொள்ளலாமென்று தர்மசாஸ்திரம் கட்டளை இட்டிருக்கிறது. பக்கத்து ராஜாவிடம் கொள்ளையடித்தாவது யாகம் செய்தால் மோக்ஷமும் மேன்மையுமடைவாய் புரோகிதன் வார்த்தையைக்கேட்காவிட்டால் நீயும் உன் சுற்றமும் நரகத்திற்குப் போவீர்கள் உன் ராஜிய விருத்தியும் கெட்டு விடுமென்று சொல்லப்பட்ட வேத விதிகளின் பாரம் க்ஷத்திரியன் தலையில் ஏற்றிவிடப்பட்டிருந்தது வைசியனே பொருள் சம்பாதித்துக் கொண்டு ராஜாவையும்,கர்மத்தால் பிராமணனையும் திருப்தி செய்துமோக்ஷத்திற்குப் போக வேண்டியவன் சூத்திரனே அறிவில்லா மடையன் படிக்கப்படாத பாப்பானின் அடிமை. இவ்வித நிலைமையில் நம் இந்தியா நாடு இருந்தமையால் உடற்கூறிலக்கணம் கற்றுக் கொள்ளவில்லை என்பதை ஒருவாறு உணர்ந்திருப்பீர்கள்.

இப்பொழுது பாப்பான் முதற்கொண்டு எல்லாரும் பிணத்தை அறுத்து உடற்கூறி லக்கணம் தெரிந்து கொள்ளுகிறார்களே என்பதும் மெய்யே. வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் சாஸ்திரங்களுக்கும் வழக்கங்களுக்கும் தீட்டு இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதோ? ஒய். எம். சி. கூட்டத்திலும் ஆரியன் ஓட்டலிலும் சீமை போகப் புறப்படும் பாப்பான் பழகி கப்பலில் அனுபோகப்பட்டு சீமை போய் பன்றியின் மாம்சமும் மாட்டின் உடல் முழுதும் தின்று பிரஞ்சு ஜெர்மெனி முதலிய மேனுடெல்லாம் பல ஒழுக்கக் கேட்டிலீடுபட்டு பன்றி மாம்சம் அழுகிப்புழுத்து அதில் பல புழுவுண்டாகி அப்புழுக்களெல்லாம் ஒரே புழுவாய் ஆன புழுவைத்தின்று வரும் பாப்பார்களும் அவர்கள் கூட்டத்திலிருக்கும் உயர்ந்த ஜாதியார்களும் நம் வீட்டில் காப்பிகூடச்சாப்பிட மாட்டார்கள். ஏன் நம் தேசத்திலும் சமயத்திலும் தான் தீட்டு இருக்கிறது வெள்ளைக்காரர்கள் விஷயத்தில் தீட்டில்லை என்பதை இனியுமா நீங்கள் தெரியவில்லை. ஒரு சிலுவையைப் போட்டுக் கொண்டால் நமது கடவுள் கோவிலுக்குள் கூப்பிட்டுக் கொள்வதும் சமயப் பெரியவர்களுக்கு சங்கை ஒழிவதும் நீங்கள் கண்டதில்லையோ மலையாளத்தில் பணக்காரர்கள் வீட்டு வேலை செய்வதற்கு தீண்டப்படாதவர்கள் என்று நினைப்பவர்கள் கழுத்தில் சிலுவையைப் போட்டு வேலை முடிந்த உடன் அந்த சிலுவையை வாங்கி வைத்துக் கொள்ளுவதும் அவர்கள் கழுத்தில் சிலுவையிருக்கும் வரையில் தீட்டில்லாமலிருப்பதும் அதை எடுத்து விட்ட உடன் தீட்டு சுற்றிக்கொள்ளுவதும் நீங்கள் பார்க்காவிட்டாலும் கேட்டதில்லையோ?

அன்னம், ஆமை, தவளை, மயில், குதிரை, கோழி, முதலியவைகளின் நடைகளின் சாயல் போன்று நாடி நடக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தெரிந்து கொள்ளுவதற்கே அநேக நாள் பழக்கமும் மானசிக உணர்ச்சியும் இருந்தால் கூட கஷ்டமாகவிருக்கையில் கைக்குமேல் நார்மடியை போட்டு நாடி பார்த்தால் நாடி அடிப்பதில் கிரானம் இன்னும் தவறுமோ? வெள்ளைக்காரன் நாடி அடிக்கு கணக்கைகணிக்கும் மனிதனும் நேரம் காட்டும் கெடியாரமும் எங்கே தவறி விடுமோ என்று பயந்து நாடியைக் கணக்கெடுக்ககருவியும்செய்துவிட்டான்நம் உயர்ந்த ஜாதி வைத்தியர்கள் தீட்டு ஆகாமலிருப்பதற்கே நார்மடியை கையில் போட்டு நாடியைத்தெறிவார்கள் நார்மடியைப் போட்டு நாடிபார்க்க வைத்தியம் சொல்லவில்லை வர்ணாஸ்ரம சாஸ்திரம் நார்மடிக்கு தீட்டில்லை என்று சொல்லியிருக்கிறது. வைத்தியத்தில் வருணாசிரம தீட்டு புகுந்து கொண்டால் வைத்தியம் நம் நாட்டில் எப்படி விளங்கியிருக்குமென்பதை நீங்களே ஆலோசியுங்கள். நாடி பார்க்கவே தீட்டு வந்து பட்டும் பரிகாரமானால் மலம் அடைத்துக் கொண்டவனுக்கு எப்படி பரிகாரம் செய்வது செய்யப் போனால் தீட்டை எவ்விதத்தால் போக்கிக் கொள்ளுவது வெள்ளைக்கார வைத்தியம் எனிமாப் பெட்டி கண்டுபிடித்திருக்கிறது அதிலும் மலம் வராவிட்டால் விரலை விட்டு எடுக்க இங்கிலீஷ் வைத்தியர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது இது வைத்தியமா? நார்மடிவைத்தியம் வைத்தியமா? கும்பத்திலிருந்து நூல் வழியாக விக்கிரகத்துக்குள் சுவாமி போனார் என்பதை நம்புவதால் பணத்திற்குத்தான் நஷ்டம் நார்மடியின் வழியாக வியாதியஸ்தனுடைய வியாதி வைத்தியன் மனதில் நுழைவதில் பணத்திற்கும் உயிருக்கும் நஷ்டம் மாதவிடாய் ஆன பெண்களுக்கு தூரவிருந்து வைத்தியம் செய்வதும் பிரசவமானவளுக்கு அந்த வீட்டை எட்டிப்பார்த்து வைத்தியம் செய்வதும் வைத்திய சாஸ்திரமா? சமய சாஸ்திரமா? வருணாஸ்ரம தர்மத்தையும் அதை பெற்ற சமயப்பிள்ளைகளையும் குற்றம் சொல்லுகிறோம் என்று எங்களை சொல்லுகிறார்களே.

(தொடரும்)

இதுவரையிலும் இந்தியாவுக்கு வராதது.

எல்லாவித வலி உபத்திரவங்களுக்கும், வீக்கங்களுக்கும், வெட்டுக்காயங்களுக்கும்

## புல்-சத்

கைகண்ட திராவகம். ஜாவாவிலுள்ள மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு
ஜாவா
**டாக்டர்**

புட்டி 1க்கு கிரயம் ரூ. 1—2—0.
ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— K. ராதா கிருஷ்ணன்,
S. 226 கிணத்தடி சந்து,
கொட்டுபாளைய தெரு, நாகபட்டணம்.

## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம, புராணம, ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அநீதிகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
152, சிசில்ரோட், சிங்கப்பூர்.

## அறிவிப்பு.

வர்ணம்! வார்னிஷ்!!

கல்கத்தா ஷாலிமார் வர்ண, சாய, வார்னிஷ் கம்பெனியாரால் தயாரிக்கப்படும் எல்லாவிதமான வர்ணம், சாயம், வார்னிஷ் எண்ணெய் முதலியவை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம, திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு எங்கள் ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட விலாசத்தாரிடம் கிடைக்கும்.

ஆர். தண்டபாணி செட்டியார்,
வியாபாரி & கண்ட்ராக்டர்,
நாகப்பட்டணம்

ஷாவாலெஸ் அண்டு கோ,
ஏஜண்டுகள்.
ஷாலிமார் பெயிண்ட் கலர் வார்னிஷ்
கம்பெனி லிமிடெட்,
P. O. பெட்டி நெ. 14,
சென்னை.

# மதுரை முனிசிபாலிட்டி.

## டெண்டர் நோட்டீஸ்.

மதுரை டவுனிலிருந்து குப்பை, கக்கூஸ் குப்பை முதலியவைகளை சராசரி சுமார் 6 மைலுக்குட்பட்ட தூரத்திலுள்ள குப்பை டிப்போவிற்கு மோட்டார் லாரிகளில் தினசரி அப்புறப்படுத்த டெண்டர்கள் கோரப்படுகின்றன. டெண்டர்கள் முத்திரை வைக்கப்பட்ட உரைகளில் போடப்பட்டு நாளது 1929 ம் வரு மார்ச்சு மாதம் 20 ம் தேதியிலாவது அதற்குள்ளாகவாவது அடியிற்கையொப்பமிட்டவரிடம் கிடைப்பதுடன் ரூ 1000 டிப்பாசிட்டும் அத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் கண்ட்ராக்டை சரிவர நடத்துவதற்காக வேண்டி ஓர் எக்ரிமெண்ட் எழுதி முடித்து கொடுப்பதுடன் மேற்கொண்டு ரூ 1000 செலுத்தவேண்டும். இந்த ரூ 1000 த்துடன் முதலில் கட்டிய டிப்பாசிட் தொகையையும் சேர்த்து செக்யூரிட்டி டிப்பாசிட்டாக வைத்துக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு நாளும் அப்புறப்படுத்த வேண்டிய குப்பையானது சுமார் 10000 முதல் 12000 கன அடிக்குள்ளாகவும் சுமார் 160 டன்களுக்கு மேல் 175 டன்களுக்குள்ளாகவும் இருக்கும்.

குப்பையை முனிசிபல் தோட்டிகளால் கூட்டி குப்பைத் தொட்டிகளில் சேர்க்கப்பட்டாவது அல்லது தெருக்கள் அல்லது சந்துகளின் ஓரங்களில் ஒதுக்கப்பட்டும் இருக்கும் இந்தக்குப்பைகளை டவுனில் ஆங்காங்கே குறிப்பிட்ட இடங்களுக்கு டெண்டர்தார் கொண்டுபோய்ச் சேர்த்து அவ்விடங்களிலிருந்து லாரிகளில் ஏற்றி, குப்பை டிப்போவிற்கு கொண்டுபோக வேண்டும். ஷை குறிப்பான இடங்களை (Collecting Centres) பொதுக் கக்கூசுகளின் பக்கத்திலும், மற்றும் கௌன்சிலால் சௌகரியமெனக் கருதப்பட்டு நிர்ணயிக்கப்படும் இடங்களிலும் ஏற்பாடு செய்யப்படும்.

தினசரி அப்புறத்தப்படுத்த வேண்டிய கக்கூஸ் குப்பையானது, சுமார் 1800 கன அடிக்குமேல் 2000 கன அடிக்குள்ளாகவும், 45 டன்களுக்கு மேல் 50 டன்களுக்குள்ளாகவும் இருக்கும். இந்தக்குப்பையானது முனிசிபல் தோட்டிகளினால் பொதுக்கக்கூசுகள் இருக்கும் இடங்களிலும் மற்றும், குறிப்பிட்ட இடங்களிலும், 2 அடி உயரமும் ஒன்றரை அடி குறுக்களவும் உள்ள மூடியிட்ட தகரத்தொட்டிகளில் சேர்த்துவைக்கப்படும், ஷை குறிப்பிட்ட இடங்களிலிருந்து இக்குப்பை டெண்டர்தாரால் டிப்போவிற்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.

குப்பையும், கக்கூசும் ஷை குறிப்பிட்ட இடங்களிலிருந்து (Collecting Centres) டிப்போவிற்கு காலை 6-மணிக்கு மேலும் மாலை-9 மணிக்குள்ளும் அப்புறப்படுத்தப்படவேண்டும.

தெருக்களிலிருந்தும், சந்துகளிலிருந்தும், டெண்டர் தாரால் குறித்த இடங்களுக்கு (Collecting Gentres) குப்பையை அப்புறப்படுத்துவதானது, கௌன்சிலால் ஏற்படுத்தப்படும் காலவரையறைகளுக்குள்ளாகவே செய்யப்படவேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர் தாரால் உபயோகிக்கப்படும் லாரிகள் அநேகமாகப் புதியனவாகவும், நல்லவேலைசெய்யும் நிலைமையில் இருப்பதுடனும் அவைகள் உபயோகிக்கப்படுமுன், முனிசிபல் கௌன்சில் சேர்மன் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் வேண்டும்.

குப்பைகளை எடுத்துக்கொண்டு செல்லும்பொழுது அவைகளை காற்று அடித்துக்கொண்டு போகாதபடி லாரிகளில் கால்வான்ஸ் துணியாலானமேல் மூடிகள் போடப்பட்டிருக்கவேண்டும்.

ஷை கண்டிராக்டானது 3 (மூன்று) வருஷங்களுக்கு ஒப்புக்கொள்ளப்படவேண்டும்.

ஒவ்வொரு டெண்டர்களிலும் கீழ்க்கண்ட விஷயங்களைத் தெளிவாய்க்குறிப்பிட வேண்டும்,

1. லாரிகளைப்பற்றிய முழு விவரங்கள் செய்யப்பட்ட கம்பெனியின் பெயர், அவைகளில் ஏற்றக்கூடிய பாரத்தின் பரிமாணம் அல்லது கன அளவு.
2. குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக எத்தனை லாரிகள் உபயோகிக்கப்படுமென்பது.
3. அவசர உபயோகத்திற்காக பிரத்தியேகமாய் எத்தனை லாரிகள் வைத்துக்கொள்ளப்படுமென்பது.
4. ஒவ்வொரு லாரிகளையும் ஒரு நாளைக்கு எத்தனை நடைகளுக்கு உபயோகப்படுத்தப்படுமென்பது.
5. தெருக்களிலிருந்தும் சந்துகளிலிருந்தும் குப்பையைக்குறித்த இடங்களுக்கு (collecting centres) எவ்வாறு கொண்டு சேர்க்கப்படுமென்பது.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் 1929 ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30 ம் தேதிக்குள் லாரிகளை சப்ளை செய்து உடனே வேலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

முனிசிபல் ஆபீஸ்,<br>
மதுரை 25—2—29.

(ஒப்பம்.) ஆர். எஸ். நாயுடு,<br>
சேர்மன்.

கிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த கிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலுகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின் மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த போறிஞர்களும் பிறரும் மத சமூக தேசிய முன்னேற்றத்தைப் பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைச் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்.

| | |
|---|---|
| மத உண்மைகளா? | கிராமச் சீர்திருத்தங்களா? |
| தத்துவ ஆராய்ச்சிகளா? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா? | வைத்திய விசேஷங்களா? |
| வியாபார ரகசியங்களா? | தேசிய தத்துவங்களா? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா? |
| | இன்னிசைப் பாட்டுகளா? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருட சந்தா ரூ 3. 6 மாத சந்தா ரூ 1—12—0

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ 4.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

## லோககுரு என்பவர் உலகத்திற்கே குருவா?

சுக்ல வருஷத்திய

நேத்திர ஜீவ நக்ஷத்திராதி

சாந்திர சௌரமான சர்வ முகூர்த்த

# ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1க்கு அ. 2. 6-க்கு அ. 8. 12-க்கு அ. 14. எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி ஆபீஸ்" மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,

தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி

மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்

8 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0, காட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

வெட்டர்சரி தோட்டம், சேலம்.

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 4—15—0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

ஸ்ரீ கிருஷ்ணா ஏஜன்ஸி,

தபால் பெட்டி 119, மதராஸ்.

ஸ்ரீமதி எஸ். ராமசாமி அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.